பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2048 ஐப்பசி 21 செவ்வாய்க்கிழமை 07.11.2017 கதிர் 02

## மன்றில் ஆஜராக செனரத் தயாராம்!

கொழும்பு,நவ.07
பெரும் நிதிமோசடி விவகாரம் தொடர்பாக விசாரணை செய்வதற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷவின் பிரதம நிர்வாக அதிகாரியாகவிருந்த காமினி செனரத்தை நிதிக் குற்றவியல் பொலிஸார் தேடிவருகை

பக்கம் 18

# யாழ். வந்த பயணிகள் பஸ் புத்தளத்தில் கோர விபத்து

## 7 பேர் சாவு!

### 43 பேர் படுகாயம்

கொழும்பு, நவ. 07

**புத்தளம் - கொழும்பு பிரதான வீதியில் மதுரங்குளிப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற பஸ் விபத்தில் 7 பேர் உயிரிழந்துள்ளனர். 43 பேர் காயமடைந்துள்ளனர்.**

**கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பயணிகள் பஸ் குடை சாய்ந்தமையாலேயே இந்த விபத்து நடந்துள்ளது.**



இந்தத் தனியார் பஸ் மதுரங்குளிப் பகுதியில் ஓட்டோ ஒன்றை முந்திச்செல்லமுற்பட்டபோதுகட்டுப்பாட்டைஇழந்துவீதிக்குஅருகில்இருந்த பாலத்தில் மோதிக் கவிழ்ந்தது.

இதனால் பஸ்ஸில்பயணித்த 7 பேர் உயிரிழந்தனர். காயமடைந்த 43 பேர் புத்தளம் ஆதார வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டு, பின்னர்மேலதிகச்சிகிச்சைகளுக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற் றப்பட்டனர்.

இந்த விபத்தினால் 5 பேர் சம்பவ இடத்தில் உயிரிழந்தனர் எனவும், இருவர் சிகிச்சைக்காக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தனர் எனவும் பொலிஸார் கூறினர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முந்தல் பொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர்.

# துயிலும் இல்லம் செல்ல நல்லாட்சியிலும் தடை

## தேராவிலில் சிரமதானம் செய்யச் சென்றோரைத் திருப்பி அனுப்பியது ராணுவம்

கிளிநொச்சி, நவம்பர் 07

**மாவீரர் துயிலும் இல்லங்களுக்குள் சென்று மாவீரர்களை நினைவு கூர்வதற்கு நல்லாட்சி அரசும் தடை விதித்து வருகின்றது. விசுவமடு - தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தைத் துப்புரவு செய்ய நேற்று அங்கு சென்ற மக்கள் அப்பகுதியில் முகாம் அமைத்துள்ள படையினரால் அனுமதி மறுக்கப்பட்டுத் திருப்பியனுப்பப்பட்டனர்.**

இதனால் அங்கு மக்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 21 ஆம் திகதி மாவீரர் வாரம் ஆரம்பமாகவுள்ள நிலையில் தாயகத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களைத் துப்புரவு செய்யும் பணிகள்

பக்கம் 18



## ஆயுதமின்றியே மைத்திரி ஆட்சியை அடக்கி ஒடுக்கியிருப்பார் பிரபாகரன்

### அந்தளவுக்குப் பலவீனமாக உள்ளது நல்லாட்சி என்கிறது மஹிந்த அணி



கொழும்பு, நவ. 07
விடுதலைப் புலிகளின் தலைவர்பிரபாகரன் இருந்திருந்தால் தற்போதையஆட்சியாளர்களை ஆயுதம் ஏந்தாமலே அடக்கியிருப்பார். அந்த அளவுக்குப் பலவீனமாக உள்ளது நல்லாட்சி.

இவ்வாறு தெரிவித்தார் மஹிந்த அணி நாடாளுமன்ற

பக்கம் 18


## யாழ். குடும்பஸ்தர் கேரளக் கஞ்சாவுடன் வவுனியாவில் கைது

வவுனியா, நவ. 07
வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் கேரளக் கஞ்சாவுடன் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரைக் கைது செய்துள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று நடைபெற்ற இந்தச் சம்பவம் தொடர்

பக்கம் 18

## குடாநாட்டில் நேற்று பெற்றோலுக்கு 'கியூ'



யாழ்ப்பாணம், நவ. 07
யாழ்.குடாநாட்டில்பெற்றோலுக்கு ஏற்பட்டிருந்த தட்டுப்பாட்டால்எரிபொருள் நிரப்பும்நிலையங்களுக்கு முன்னால்நேற்று மக்கள் வாகனங்களுடன் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.மதியத்துக்குப்பின்னர்

பக்கம் 18

## பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் ஜோசப் எம்.பி. கொலை வழக்கு

கொழும்பு, நவ. 07
கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் உட்பட ஆறு பேருக்கு எதிரான வழக்கு விசாரணை மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் பலத்த பாது

பக்கம் 18

## இரணைமடுக் குளப் பகுதியை முற்றாக விடுவித்தது ராணுவம்

இரணைமடுக் குளத் துக்கு அருகில் முகாம் அமைத்திருந்த இராணுவத்தி

பக்கம் 18



## பெற்றோல் தட்டுப்பாடு 9 ஆம் திகதியே நீங்கும்

### அமைச்சர் அர்ஜுன கூறுகிறார்

கொழும்பு, நவ. 07
பாவனையாளர்களின் நாளாந்தத் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் எரிபொருள்

பக்கம் 18

# தந்தைசெல்வா முதல் சம்பந்தன் வரைக்கும் பேசிக்கொண்டேதான் இருக்கிறார்கள்!

## தீர்வுதான் இல்லை என்கிறார் முன்னாள் எம்.பி. வினோநோகராதலிங்கம்

வவுனியா, நவ. 07

தந்தை செல்வா தொடக்கம் சம்பந்தன் ஐயா வரைக்கும் தொடர்ந்து பேசிக்கொண்டே தான் இருந்தார்கள். ஆனால் தீர்வு தான் இல்லை என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியா விபுலாநந்தாக் கல்லூரியில் புலமைப்பரிசிலில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு விழாவில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த விழாவை பற்றிய விமர்சனங்களைப் பழைய மாணவர்களின் முகநூல் பக்கத்தில் பார்க்க கூடியதாக இருந்தது. விபுலானந்த கல்லூரி, சில வருடங்களாக பல்வேறு விடயங்களில் குழப்பகரமான நிலையில் சென்றிருப்பதையும், அதனால் மாணவர்கள் மத்தியிலும், பெற்றோர்கள் மத்தியிலும் ஒரு குழப்பம் உருவாகியிருக்கின்றமை உங்கள் எல்லோருக்கும் தெரியும்.

அரசியல்வாதிகளை அழைக்கக் கூடாது என்ற கருத்தைக் கேள்விப்பட்டேன். அவர்கள் எதைச் சாதித்தார்கள் அதற்கு நானும் உடன்படுபவனாக இருக்கின்றேன். அரசியல்வாதி என்றால் வாக்குறுதி வழங்கத் தான் வேண்டும். மக்கள் ஏற்றுக் கொள்ள கூடியளவுக்கு சொல்ல வேண்டும்.

முயற்சி எடுக்கின்றோம் என்று சொல்லி விட்டு செல்கின்றார்கள். ஆனால், என்ன கட்டத்தில் இருக்கிறது. என்ன முடிவு எடுத்தார்கள் என்பது தெரியாது. தந்தை செல்வா



தொடக்கம் சம்பந்தன் ஐயா வரைக்கும் தொடர்ந்து பேசிக் கொண்டே தான் இருக்கிறார்கள். ஆனால், தீர்வுதான் இல்லை.

தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியாத மக்களுக்கு, அரசியல் உரிமையை பெற்றுக்கொள்ள முடியாத அரசியல் தலைவர்களாக தான் இதுவரையும் இருக்கின்றார்கள்.

அது நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கலாம், தலைவர்களாக இருக்கலாம் எல்லோருக்குமே இது பொருந்தும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் என்பது தவிர்க்க முடியாதது. இன்று அரசியல் தேவை. ஆனால், அரசியலில் யார் இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானிப்பவர்கள் நீங்களாகத் தான் இருக்கவேண்டும்.

அது தான் இங்கு முக்கியம். அதிலே நீங்கள் தவறு செய்தால் தவறான வழியிலேயே எங்கள் அரசியல் சென்று கொண்டிருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

(க-100)

# வவுனியா விபுலானந்தாக் கல்லூரியில் புலமைப்பரிசில் மாணவர் கௌரவிப்பு!

வவுனியா, நவ. 07

வவுனியா விபுலானந்தாக் கல்லூரியில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு சிறப்பாக இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் சு.அமிர்தலிங்கம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நேற்று முன்தினம் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது இந்தப் பாடசாலையில் இருந்து இம்முறைப் புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்த 49 மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர். அவர்களுக்கு விருதுகளும் வழங்கப்பட்டன.

இதன்போது இந்த மாணவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களும் பெற்றோர்களால் கௌரவிக்கப்பட்டனர்.



இந்த நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், கே.கே.மஸ்தான் மற்றும் வடக்கு விவசாய அமைச்சர் க.சிவனேசன், முன்னாள் சுகாதார அமைச்சரும் வடமாகாண சபை உறுப்பினருமான ப.சத்தியலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் செ. மயூரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

(க-100)

# கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானம்!

கிளிநொச்சி, நவ. 07

தேசிய மாவீரர் நாள் நினைவேந்தலை வடக்கு கிழக்குத் தமிழர் தாயகத்தின் துயிலும் இல்லங்களில், எழுச்சிபூர்வமாக அனுஷ்டிப்பதற்கான முன்னேற்பாடுகள் தற்பொழுது மக்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன்படி நேற்றுமுன்தினம், கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்திற்கான சிரமதானப் பணிகள் பரந்தன் பகுதியைச் சேர்ந்த மக்களால் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்த சிரமதானப் பணியில் ஆண்களும் பெண்களுமாகக் கலந்துகொண்டு மாவீரர் விதை நிலத்தில் வளர்ந்திருந்த பூண்டுகளை அகற்றியுள்ளனர். அத்தோடு எஞ்சியிருந்த ஒருசில கல்லறைகளையும் சுத்தப்படுத்தியுள்ளனர்.

# எதற்கெடுத்தாலும் கதவடைப்புச் செய்கிறார்கள் எங்களுடைய தலைமைகள் என்கிறார் மயூரன்!

வவுனியா, நவ. 07

எங்களுடைய தலைமைகளைப் பொறுத்தமட்டில் எதற்கெடுத்தாலும் கதவடைப்பு செய்கின்றார்கள் என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்செ.மயூரன்தெரிவித்துள்ளார்.

வவுனியா விபுலானந்தாக் கல்லூரியில் புலமைப் பரிசிலில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு விழாவின் போது உரையாற்றிய முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இன்று பெற்றோர்கள் மத்தியிலே அடுத்தவர்வீட்டிலேயே என்ன நடக்கிறது என்று தான் பார்த்து கொண்டிருக்கின்றார்கள். உங்களது மொழியிலே சொல்லப்போனால் விக்பாஸ் அடுத்தவன் வீட்டிலே என்ன நடக்கிறது என்று தான் பார்க்கிறது. எங்களுடைய வீடுகளிலே என்ன நடக்கிறது என்று நாங்கள் பார்ப்பதில்லை.

இன்றைக்குப் பார்க்க போனால் வடக்கே மாணவர்கள்மத்தியிலேதற்கொலைகள் அதிகமாகத் தூண்டப்படுகின்றன. மாணவர்கள் மத்தியிலே எதற்கெடுத்தாலும் தற்கொலையே அதற்கான தீர்வுகளாக வந்து கொண்டிருக்கின்றன. அந்தத் தவறான முடிவுகளை ஏற்க முடியாது.

எங்களுடைய தலைமைகளைப் பொறுத்தமட்டில் எதற்கெடுத்தாலும் கதவடைப்பு போல மாணவர்களும் தற்கொலை என்ற நிலைக்குதான் எங்களுடைய பிள்ளைகள் வளர்ந்து கொண்டிருக்கின்றார்கள். அது பிள்ளைகளுடைய குறை அல்ல அது பெற்றோருடைய குறை.

30 வருட யுத்தம் எங்களுடைய சின்னஞ்சிறார்களை பாதித்திருக்கின்றது. எல்லோரும் முகநூலில் சொல்கின்றமை போல நானும் சொல்கின்றேன்.

அண்மையில் கூட பரீட்சையில் தூக்கு குண்டை பயன்படுத்துவது யார் என்ற வினாவுக்கு ஒரு மாணவன் ஆமிக்காரன் என்று சொல்லியிருக்கான். இந்த யுத்த வடுக்கள் இந்த சின்னஞ்சிறார்களின் ஆழ்மனதை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை வெளிப்படுத்துகின்றது. கடந்த கால போராட்டங்கள் எங்கள் மனதை விட்டு வைக்கவில்லை.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இதே நிகழ்விலே நானும் கலந்து கொண்டேன். அதிபர் வந்ததும் சொன்னமை போல ஓர் ஆட்சி மாற்றத்துக்கு பிறகு இரண்டு வருடத்திற்கு பிறகு - நாங்களும் திரும்ப வந்திருக்கின்றோம்.

ஆளும் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தின்ற அமைச்சர்கள் இங்கு வந்து வாக்குறுதி கொடுத்திருகின்றார்கள். யாழ் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அமைச்சர்கள் இங்கு வந்து வாக்குறுதி கொடுத்திருக்கின்றார்கள். இந்தப்பாடசாலைக்கானமைதானம் இன்னும் அமைக்கவில்லை என்பதைக்கண்கூடாகப் பார்க்க கூடியதாக இருக்கின்றது.

இந்தப் பாடசாலை மைதானத்திற்காக நான் அடித்தளம் இடுகின்றேன். அடுத்த வருடம் நான் எனது நிதியில் இருந்தோ அல்லது சொந்த நிதியிலிருந்தோ ஒருலட்சம் ரூபாவைத் தருகின்றேன். நான் வாக்குறுதி கொடுத்தால் நிச்சயம் செய் வேன்.

அதேவேளை, சமூக வலைத்தளங்களிலே பழைய மாணவர்களால் ஓர் ஆதங்கம் அரசியல்வாதிகளை பிரதம விருந்தினராக அழைத்திருக்கின்றார்கள் என்பது. அவர்களுக்கு நான் ஒன்றை கூறுகின்றேன், இந்த நாட்டினுடைய ஜனாதிபதியானாலும் அவர்கள் கூட ஒரு பாடசாலையின் பழைய மாணவர்களே, உங்களுடைய பாடசாலையில் ஒரு நிகழ்வு நடைபெறுகின்ற போது உங்களை அழைக்க மாட்டார்கள். நீங்கள்தான் வந்து கலந்துகொள்ள வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(க-100)

காலைக்கதிர்
Kalaikkathir



# மருத்துவ மாணவர்களின் பகிஷ்கரிப்பை முடிவுக்குக் கொண்டுவரக் கோரிக்கை

## மருத்துவபீடங்களின் பீடாதிபதிகள் கூட்டாக விடுப்பு

சைட்டம் தொடர்பான பிரச்சினைக்காக மருத்துவபீட மாணவர்களால்மேற்கொள்ளப்படும்பகிஷ்கரிப்பைமுடிவுக்குக்கொண்டுவருமாறு அரச மருத்துவ பீடங்களின் பீடாதிபதிகளால் கூட்டு அறிக்கை மூலம் கோரப்பட்டுள்ளது.

பேராசிரியர் ஜெனீபர் பெரேரா (பீடாதிபதி, மருத்துவ பீடம் – கொழும்பு பல்கலைக்கழகம்), பேராசிரியர் வஜிர வீரசிங்க (பீடாதிபதி, மருத்துவபீடம் – பேராதனைப் பல்கலைக்கழகம்), பேராசிரியர் சமன் விஜயசுந்தர (பீடாதிபதி, மருத்துவ பீடம் – ருகுண பல்கலைக் கழகம்), வைத்திய கலாநிதி எஸ்.ரவிராஜ் (பீடாதிபதி, மருத்துவ பீடம் – யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்), பேராசிரியர் நிலாந்தி டி சில்வா (பீடாதிபதி, மருத்துவ பீடம் – களனி பல்கலைக்கழகம்), பேராசிரியர் சுறாங்கி ஜசவர்த்தன (பீடாதிபதி, மருத்துவ பீடம் – ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகம்) ஆகியோர் கூட்டாக இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர். இது தொடர்பாக அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

‘சைட்டம் நிறுவனத்தின் மருத்துவபீடம்தொடர்பில்எழுந்த பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமனம் செய்யப்பட்ட ஜனாதிபதி குழுவினால் முன்வைக்கப்பட்ட தீர்வு தொடர்பாக 29 ஒக்டோபர் 2017 இல் அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையை நாம் வரவேற்கின்றோம்.

அரசாங்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டதன்பிரகாரம் சைட்டத்தின் மருத்துவ பீடம் இல்லாது ஆக்கப்படும். மேலும் மாணவர்கள் உள்வாங்கலும் நிறுத்தப்படவுள்ளது. அத்துடன், அதற்கு மாற்றீடான புதிய நிறுவகம் இலங்கை மருத்துவ பேரவையின் புதிய சான்றுப்படுத்தல்களுக்கேற்ப மீளமைக்கப்படும். மருத்துவக் கல்விக்கான மிகக் குறைந்த தரம், உயர்கல்வி அமைச்சின் பட்டம் வழங்கப்படுத்தலுக்கான சட்ட ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிமுறைகளுக்கு அமைவாகவும் உருவாக்கப்படும்.இவற்றைக்கருத்திற்கொண்டு எமது பீடங்களின் சகல மருத்துவ மாணவர்களையும் உடனடியாக தங்களுடைய கல்விச் செயற்பாடுகளுக்கு திரும்புமாறு நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

மேலும், ஜனாதிபதி ஆணைக்குழுவால் சிபாரிசு செய்யப்பட்டதன்படி குழுவின் உறுப்பினர்களையும் குறிப்பு விதிமுறைகளையும்ஒருங்கிணைப்பதற்கு உயர்மட்ட அதிகாரிகளை மிகவும் விரைவாக நியமிக்குமாறு நாம் அரசாங்கத்தை கேட்டுக் கொள்கின்றோம். மேலும் உயர்கல்வி அமைச்சு, சுகாதாரம் மற்றும்நிதி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் அரச மருத்துவ பீடங்களின் பீடாதிபதிகள் அக்குழுவில் பிரதிநிதித்துவப்படுத்துகின்றமையை உறுதிப்படுத்துமாறும் அரசிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

அத்துடன் இலங்கை மருத்துவ பேரவைக்கு எதிராக சைட்டம் பட்டதாரி மாணவர்களினால் தொடரப்பட்ட வழக்கின் மேல் முறையீட்டு நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக மருத்துவ பேரவையால் தொடரப்பட்ட வழக்கின் அடுத்த தவணையில் 29 ஒக்ரோபர் 2017 இல் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கை தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு பற்றி சட்டமா அதிபர் திணைக்களத்தினூடாக உயர் நீதிமன்றுக்கு தெரியப்படுத்துமாறும் கேட்டுக் கொள்கின்றோம். – என்று உள்ளது. (உ)

# மருத்துவ மாணவரை விரிவுரைகளுக்குத் திரும்ப இலங்கை மருத்துவர் சங்கமும் வேண்டுகோள்

கொழும்பு, நவ.7

அரச பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் வைத்தியபீட மாணவர்களை உடனடியாக விரிவுரைகளுக்கு திரும்ப வேண்டும் எனவும் இந்த மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு பெற்றோர்கள் ஒத்துழைக்க வேண்டுமெனவும் இலங்கை மருத்துவ சங்கம் அறிவித்துள்ளது.

அச்சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் –

சைட்டம் தொடர்பில் தற்போது பூதாகரமான பிரச்சினைகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

இலங்கை அரசினால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுத்திட்டத்துக்கு பின்னரும் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதிலும் உண்ணாவிரதப் போராட்டங்களை மேற்கொள்வதிலும் பயனில்லை.

இலங்கை மருத்துவ சபையும் பல்கலைக்கழகங்களிலுள்ள மருத்துவ பீடங்களும் உயர்தரத்துடன் செயற்படுகின்றன. இவ்வாறிருக்கும் போது பல்கலைக்கழக செயற்பாடுகளுக்குத் தடையேற்படுத்தும் விதத்தில் மாணவர்கள் செயற்படுகின்றமை கண்டிக்கத்தக்க செயற்பாடாகும்.

இதற்கு அவர்களின் பெற்றோரும் துணைநிற்பது மனவருத்தத்துக்குரியதாகும். தற்போது அரச பல்கலைக்கழகங்களிலுள்ள மருத்துவபீட மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளுக்கு செல்லாமையால் இந்த ஆண்டுக்கான கல்விச் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

எனவே உடனடியாக மருத்துவபீட மாணவர்கள் விரிவுரைகளுக்கு செல்ல வேண்டும். – என அறிவிக்கப்பட்டுள்ளது.









நேற்று அதிகாலை புத்தளம் – கொழும்பு பிரதான வீதியில் உள்ள மதுரங்குளிப் பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளான தனியார் பயணிகள் பஸ் தடம் புரண்டு சிதைவடைந்து கிடக்கும் படங்கள் இவை.

# தேசிய நல்லிணக்கச் செயலணியின் தலைவர் பதவியிலிருந்து சந்திரிகாவை விடுவியுங்கள்!

## பிவித்துருஹெல உறுமயவின் கம்மன்பில்ல கோரிக்கை

கொழும்பு, நவ.7

வன்முறை கலாசாரத்தை பின்னணியாகக் கொண்ட முன்னாள் அதிகாரியான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நல்லிணக்கச் செயலணியின் தலைவர் பதவியிலிருந்து விலக்க வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணி வலியுறுத்தியுள்ளது.

குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் மூளை குண்டுத்துண்டுகளுடன் செயற்படுவதால் அவரால் நல்லிணக்க செயற்பாடுகளை சரிவர செய்ய முடியாது என்று தெரிவித்த பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, அவரை உடன் பதவியிலிருந்து நீக்கும்படியும் இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்தார்.

கூட்டு எதிரணியின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான பிவித்துருஹெல உறுமய ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று நடைபெற்றது. அச்சமயம் அவர் கூறியவை வருமாறு:-

1999ஆம் ஆண்டிற்குப்பின் அவர் சுயநினைவோடு தான் பேசினார். அவர் குண்டுத் தாக்குதலை எதிர்கொண்டதன் விளைவாக அவரது மூளை பாதிக்கப்பட்டதுடன், வெடித்துச் சிதறிய குண்டுத்துண்டு இன்னும் அவரது மூளையில் காணப்படுகிறது. அதனை அகற்ற சத்திரசிகிச்சை மேற்கொண்டால் அவரது உயிருக்கே அது ஆபத்தாகிவிடும். அதனால் அவரது மூளை குண்டுத்துண்டுடன் தான் இயங்குகின்றது. எனவே அவரது அறிவிப்பு தொடர்பில் பதிலளிக்கவோ அல்லது அவமானப்படுத்தவோ இயலாது. மாறாக, ஆயுள்நோயாளி என்ற வகையில் அவர்மீது அனுதாபம் தான் வருகிறது. எனினும் அரசாங்கத்திற்கு ஒரு கடமையிருக்கிறது. எங்களுடன் பேசுக்கு வந்தால் அடித்து தாக்குவார் என சந்திரிகா குமாரதுங்க அம்மையார் மிகவும் ஆக்ரோஷமாக கூறியமையை நான் கண்டேன்.

கடந்த காலத்தில்வடமேல் மாகாணசபை தேர்தலில் மிகவும் கலவரத்தை ஏற்படுத்திய நபர் இன்று நல்லிணக்க செயலணியின் தலைவராக இருப்பதால் நாட்டில் எவ்வாறான நல்லிணக்கம் ஏற்படும் என்பது சந்தேகமே. உண்மையிலேயே நல்லிணக்கத்தை ஏற்படுத்த இந்த அரசாங்கத்திற்கு அவசியம் இருந்தால் சந்திரிகா அம்மையாரை நல்லிணக்கச் செயலணியின் தலைவர் பதவியிலிருந்து விலக்கிவிட்டு மிகவும் சமாதானமாக அணுகக்கூடிய ஒருவரை நியமிக்கும்படி அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுகின்றோம். – என்று தெரிவித்தார்.

# ரயில்வே ஊழியர்கள் நாளை பணிப்புறக்கணிப்பு

ரயில் சேவையிலுள்ள பல்வேறு ஊழியர் சங்கங்களும் இணைந்து நாளை 8 ஆம் திகதி பணிப்பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும் அச்சங்கங்கள் அறிவித்துள்ளன.

இந்நடவடிக்கையில், ரயில் சாரதிகள் சங்கம், ரயில் நிலையப் பொறுப்பதிகாரிகள் சங்கம், ரயில் கட்டுப்பாட்டுப் பிரிவு மற்றும் ரயில் முகாமையாளர் சங்கம் ஆகியன இணையவுள்ளன எனவும் கூறப்படுகின்றது.

# பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 12 பேர் பொலிஸாரால் கைது

கொழும்பு, நவ.7

சாலியவெவ பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட அவசர சோதனை நடவடிக்கையின் போது நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில் மறைந்திருந்த 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களுள் 4 பெண்களும் அடங்குகின்றனர்.

கடந்த 04 ஆம் திகதி நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே அவர்கள் கைதானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஒரு பெண், சட்டவிரோத போதைப்பொருள்களை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் நீதிமன்ற விசாரணையை எதிர்நோக்கிய மருமகனுக்கு பிணையாக இருந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மற்றைய ஒரு பெண், வீட்டை உடைத்து களவாடிய ஒருவருக்கு பிணையாக இருந்தவர். அத்துடன் ஏனையவர்கள் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணையை எதிர்நோக்கி பின்னர் தப்பிச் சென்றவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## இலங்கையில் மனித உரிமைகள்; ஐ.நா. மதிப்பீட்டில் அம்பலமாகும்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் 28ஆவது 'பூகோள மனித உரிமைகள் மீளாய்வுக் கூட்டத் தொடர்' நேற்று ஜெனீவாவில் ஆரம்பமாகியுள்ளது.

அங்கத்துவ நாடுகள் ஒவ்வொன்றிலும் மனித உரிமைகள் நிலைமை தொடர்பாக நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் மதிப்பீடு செய்வது வழமை.

வருடத்தில் மூன்று தடவைகள் இப்படி ஒவ்வொரு தொகுதி நாடுகளின் நிலைமைகள் மீளாய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

இலங்கை நிலைவரம் குறித்து 2013இல் கடந்த தடவை மதிப்பீடு செய்யப்பட்டது. நான்கு வருடங்கள் கழித்து மீண்டும் இலங்கை நிலைவரம் இப்போது மதிப்பீட்டுக்கு உட்படுகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் எதிர்வரும் 15ஆம் திகதி இலங்கையில் நிலைவரம், முன்னேற்றங்கள் மற்றும் பின்னடைவுகள் குறித்து ஆராயும். அங்கத்துவ நாடுகளின் கருத்துகளும், விசேட அறிக்கையாளர்களின் மதிப்பீடுகளும் முன் வைக்கப்பட்டு பரிசீலிக்கப்படும்.

அவற்றின் பெறுபேறாக எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை இலங்கை தொடர்பான மீளாய்வு அறிக்கையை மனித உரிமைகள் கவுன்ஸில் வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போதைய நல்லாட்சி அரசின் காலத்தில் இலங்கையில் மனித உரிமைகள் விவகாரம் ஓரளவு முன்னேற்றகரமானதாக உள்ளதாகக் கூறப்படலாம்.

ஆனால் இதற்கு முந்திய காலத்தில் மோசமாக இருந்த மனித உரிமைகள் நிலைவரங்கள் தொடர்பில் தற்போதைய அரசின் ஆட்சிக் காலத்தில் நியாயம் செய்யப்படவில்லை, நீதி வழங்கப்படவில்லை, இந்த ஆட்சி அந்த விடயங்களில் மெத்தனமாக நடந்து கொண்டுள்ளது என்ற விமர்சனங்கள் நிச்சயம் வெளிவரும் என்பது உறுதி.

முன்னைய அரசுடன் ஒப்பிடுகையில் மனித உரிமை மீறலுக்கான இடத்தைப் பரந்தளவில் இந்த அரசு வழங்கவில்லை என்று சிலாகிக்கப்பட்டாலும் முன்னர் இழைக்கப்பட்ட மோசமான மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், மனிதாபிமானத்துக்கு எதிரான செயற்பாடுகள் போன்றவை தொடர்பில் தவறு இழைத்தவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தாமல் பாதுகாக்கும் குற்றத்தை இந்த அரசும் தொடர்ந்து இழைத்து வருகின்றது என்ற முறைப்பாடு பலதரப்புகளினாலும் வெளிப்படையாகவே முன்வைக்கப்படும்.

இலங்கையில் யுத்தம் முடிவுற்ற பின்னர் அக்கால கட்டத்தில் இடம்பெற்ற மோசமான நிலைமைகள், சம்பவங்கள் குறித்து, அதிக சிரத்தையை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் தொடர்ந்து வெளிப்படுத்தி வந்திருக்கின்றது. சர்வதேச தரப்புகளும் இந்த விடயத்தில் அதீத கரிசனை காட்டி வந்துள்ளன.

இந்த விவகாரத்தை ஒட்டி கவுன்ஸிலில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பல பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன.

இலங்கையின் தற்போதைய ஆட்சிப் பீடம் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேசத் தரப்புகளிடமிருந்து தனக்கு எதிராக எழக்கூடிய அழுத்தங்கள், நெருக்குவாரங்கள் போன்றவற்றைச் சமாளிப்பதற்காகத் தானும் சேர்ந்து இந்த தீர்மானங்களுக்கான பிரேரணைகளை முன்மொழிந்து தன்னையும் பங்காளியாக்கி, பரிந்துரைகளுக்கும் இணங்கி நின்றது.

ஆனாலும், தானும் சேர்ந்து நிறைவேற்றிய தீர்மானங்கள், பரிந்துரைகளை நடைமுறையில் செயற்படுத்தாமல் அது விட்டேத்தியாகவே நடந்து கொண்டது; நடந்து கொண்டு வருகின்றது.

இதேசமயம், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் விசேட அறிக்கையாளர்கள் பலர் அண்மைய வருடங்களில் இலங்கைக்கு வந்து நிலைமைகளை உன்னிப்பாகக் கவனித்து, அறிக்கைகளைத் தயார் செய்துள்ளனர். உரிய சிபாரிசுகள், பரிந்துரைகளையும் அவர்கள் முன்வைப்பார்கள்.

இவை எல்லாம் எதிர்வரும் 15ஆம் திகதி ஜெனீவாவில் விலாவாரியாக ஆராயப்படும் என எதிர்பார்க்கலாம்.

போருடன் சம்பந்தப்பட்ட விடயங்களில் பொறுப்புக் கூறல் மற்றும் நிலைமாறு கால நீதிச் செயற்பாடுகள் தொடர்ந்தும் நிறைவேற்றப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்றமை கடும் கண்டனத்துக்கும் புதிய நடவடிக்கைகளுக்கான பரிந்துரைக்கும் வழி செய்யக் கூடும்.

★ நிலைமாறுகால நீதிச் செயற்பாடுகள் – சட்டரீதியாக – நீதியின் அடிப்படையில் – செயற்படுத்தப்படாமல் அரசியல் மயப்படுத்தப்பட்டிருக்கின்றமை –

★ போருக்குப் பின்னரான உடனடிப் பிரச்சினைகளுக்கு – மக்களின் வாழிடங்களை மீளக் கையளித்தல், அரசியல் கைதிகள் விவகாரம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல், காணாமல் போனோர் விவகாரம் போன்றவற்றுக்கு – தீர்வு காண்பதில் மெத்தனப் போக்கு நிலவுகின்றமை –

★ நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் தேவையற்ற தாமதமும், முரண்பாடான போக்கும் பேணப்படுகின்றமை –

– போன்றவை எல்லாம் இந்த மதிப்பீட்டின் பின்னதான – இலங்கை தொடர்பான – கவுன்ஸிலின் அறிக்கையில் வெளிவரும் சாத்தியமே அதிகம் காணப்படுகின்றது.

# கொழும்புக்கு வரும் சீனப் போர்க் கப்பல்



இந்தவாரம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள, சீனப் போர்க்கப்பல் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கும் செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

சீனக் கடற்படையின் பெரிய போர்க்கப்பல் ஒன்று எதிர்வரும் வெள்ளிக்கிழமை கொழும்புத்துறைமுகத்தை வந்தடையவுள்ளது என்று இலங்கைக் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த சில வாரங்களாகவே அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், இந்தோனேசியா, தென்கொரியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளின் போர்க் கப்பல்கள் அடுத்தடுத்து கொழும்புத் துறைமுகத்துக்கு வந்து கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில், வெள்ளிக்கிழமை சீனப் போர்க்கப்பல் ஒன்று கொழும்பு வரவுள்ளது. இந்தப் போர்க்கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கும் செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனநிறுவனம் அடுத்த மாதம் பொறுப்பேற்கவுள்ள நிலையில், அதற்கு ஊக்கமளிக்கும் வகையில், சீனப் போர்க்கப்பல் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்குப் பயணம் மேற்கொள்ளவிருக்கிறது எனக் கூறப்படுகிறது.

# யாழ்.இந்துக் கல்லூரியின் மாணவ முதல்வர் தினம் நாளை

## மலர் வெளியீடும் இடம்பெறும்

யாழ்ப்பாணம், நவ. 07

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மாணவ முதல்வர்தினமும் மலர் வெளியீடும் நாளை புதன்கிழமை காலை 8 மணிக்கு சிரேஷ்ட மாணவ முதல்வன் லோ.சிவலக்ஷன் தலைமையில் கல்லூரி சபாலிங்கம் அரங்கில் இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக இருதய சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி பூபாலன் லக்ஷ்மன் கலந்து கொள்வார். வரவேற்புரையை உதவி சிரேஷ்ட மாணவ முதல்வன் த.உமேஷ் நிகழ்த்துவார். தலைமையுரையை சிரேஷ்ட மாணவ முதல்வன் லோ.சிவலக்ஷன், அதிபருரையை கல்லூரி அதிபர் ஐ.தயானந்தராஜா, பிரதம விருந்தினர் உரையை பூ.லக்ஷ்மன் ஆகியோர் வழங்குவர்.

தொடர்ந்து வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய மாணவிகளின் நாட்டிய நாடகம், மாணவ முதல்வர் சபையின் 75ஆவது ஆண்டுக்கான உத்தியோகபூர்வ இலச்சினை வெளியீட்டு நிகழ்வும் அடுத்து 'இலட்சிய இளைஞன்' விருது வழங்கலும் இடம்பெறும்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பிரதி அதிபரும், மாணவ முதல்வர்சபை பொறுப்பாசிரியருமான சதா.நிமலன் நூல் வெளியீட்டுரையையும், முன்னாள் சிரேஷ்ட மாணவ முதல்வனும் யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை முதுநிலை விரிவுரையாளர் (கலைவரலாறு) பா.அகிலன் நூல் மதிப்பீட்டுரையையும் மாணவ முதல்வர்சபை பத்திராதிபர் பா.கஜேந்திரன் இதழாசிரியருரையையும் ஆற்றுவர்.

JAFFNA HINDU COLLEGE
ESTD.1943
BOARD OF PREFECTS


சிறப்புப் பிரதி வழங்கலைத் தொடர்ந்து சிறப்புப் பட்டி மன்றம் நடைபெறும். சண்டிலிப்பாய் பிரதேச சபை சமூக சேவைகள் அதிகாரியும், இணக்க சபைத் தவிசாளருமான வரணியூர் வே.சிவராஜா நடுவராகச் செயற்படுவார்.

நன்றியுரையை மாணவ முதல்வர் சபை பொருளாளர் இ.ஆரூரன் நிகழ்த்துவார். (இ)

# தொடரும் மழையுடன் கூடிய காலநிலை!

கொழும்பு, நவ. 07

மத்திய, சப்ரகமுவ, கிழக்கு, வடமத்திய, ஊவா மற்றும் வடமேல் மாகாணங்களிலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டத்திலும் எதிர்வரும் 24 மணித்தியாலங்களுக்குள் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை பெய்யக்கூடும் எனவளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.



இதனுடன் புத்தளம் முதல் காங்கேசன்துறை, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக காலி வரையான கடல் பிரதேசங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும் எனவும் மணிக்கு 70 முதல் 80 கிலோ மீற்றர் வரை காற்று வீசும் அதேசமயம், கடல் கொந்தளிப்பாகக் காணப்படும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## நாளை

08.11.2017
புதன்கிழமை

நட்சத்திரம் : திருவாதிரை மு.இ 9.07 வரை
திதி : பஞ்சமி பி.இ 12.48 வரை
சுபநேரம் : 4.35 – 6.05 வரை
இராகுகாலம்: 12.05 – 1.35 வரை

# அம்பாந்தோட்டை துறைமுகம் டிசெம்பரில் சீனாவிடம் கையளிப்பு!

கொழும்பு, நவ. 07

சீனாவின் மேர்ச்சன்ட்ஸ் ஹோல்டிங் நிறுவனமும், இலங்கைத் துறைமுக அதிகார சபையும் இணைந்து எதிர்வரும், டிசெம்பர் 8 ஆம் திகதி தொடக்கம் அம்பாந்தோட்டை துறைமுகத்தை கூட்டு முயற்சியாக இயக்கவுள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் தெனியாயவில் நடந்த கூட்டத்தில் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அம்பாந்தோட்டை துறைமுகத்தை இயக்குவதற்கு நிதி இல்லாததால் அதனை மூடுவதற்கு அரசு சிந்தித்தது.



அப்போது தான் சீன ஜனாதிபதி இலங்கை அரசும் சீன நிறுவனமும் கூட்டு முயற்சியாக இதனை இயக்கலாம் என்ற யோசனையை முன் வைத்திருந்தார்.

கொழும்பு துறைமுகத்தின் வருமானத்தைப் பயன்படுத்துவதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை. இதனால் வேறொரு தெரிவை பற்றி யோசிக்க வேண்டியிருந்தது.

அம்பாந்தோட்டை பொருளாதார வலயத்தில் பல முக்கியமான முதலீட்டுத் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன.

எல்லா தென் மாவட்டங்களுக்கும் மின் விநியோகத்தை மேற்கொள்ளக் கூடிய வகையிலான இயற்கை எரிவாயு மின் திட்டம் கப்பல் கட்டும் தளம் (dockyard) சுற்றுலா முயற்சிகள் என்பன இங்கு வரவுள்ளன.

சூரியவெவ துடுப்பாட்ட மைதானம் தொடர்பாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. அதில் யாரும் ஆர்வம் காட்டவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மார்ச்சில் இந்தியா வசமாகிறது மத்தள விமான நிலையம்!

கொழும்பு, நவ. 07

மத்தள மஹிந்த ராஜபக்ஷ விமான நிலையம், எதிர்வரும் மார்ச் மாதம் தொடக்கம் இந்திய நிறுவனத்துடன் இணைந்து இயக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையின் விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் அதிகாரசபையும், இந்திய நிறுவனம்ஒன்றும்இணைந்து, கூட்டு முயற்சியாக, மத்தளவிமானநிலையத்தை இயக்கவுள்ளனர்.

இந்த கூட்டு முயற்சி வரும் மார்ச் மாதம் முதல் செயற்படுத்தப்படும்.




அம்பாந்தோட்டை துறைமுகம் போன்ற அதே சூழ்நிலையிலேயே மத்தள விமான நிலையமும் உள்ளது,

இதனை இலாபமீட்டும் துறையாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலையில் விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் அதிகாரசபை இருக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், மத்தளவிமான நிலையத்தை இலங்கையுடன் இணைந்து கூட்டு முயற்சியாக இயக்கவுள்ள இந்திய நிறுவனத்தின் பெயரையோ, இது தொடர்பான உடன்பாட்டு விதிமுறைகள் பற்றியோ பிரதமர் ரணில் எந்த தகவலையும் வெளியிடவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

## அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் ஊடகவியலாளரைச் சந்தித்தார் பந்துல!



கொழும்பு, நவ. 07

மஹிந்த தலைமையிலான கூட்டு எதிரணியினர் கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பை, கூட்டு எதிர்க்கட்சியின் பொருளாதார ஆய்வு பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தச் சந்திப்பின்போது நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன அங்கு சென்றுள்ளார்.

எனினும் பந்துலவை அவதானித்த ஊடகவியலாளர் அவர் சந்தைக்குச் சென்று அப்படியே வந்திருக்கலாம் என எண்ணியுள்ளனர்.

தேங்காய், அரிசி, சீனி, பருப்பு ஆகிய அத்தியாவசிய பொருள்களை அவர் ஊடகவியலாளர் சந்திப்பிற்கு கொண்டு வந்தமையே அதற்கு காரணமாகும்.

நாட்டில் பொருள்களின் விலைகள் உயர்வடைந்துள்ளன. நாட்டு மக்களின் வாழ்க்கைச் செலவு உயர்வடைந்துள்ளதனையே அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான நெருக்கடி நிலையை மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

## இலங்கை வளர்ச்சியை நோக்கி நகர்வது அவசியம்

### உலக வங்கி அறிக்கை!

வளர்ச்சியை நிலைபேறானதாக வைத்திருப்பதற்கும், தொழில்களை உருவாக் குவதற்கும், வறுமையைக் குறைப்பதற்கும் இலங்கை மேலும் அதிகமான தனியார் முதலீடுகளை நோக்கியும், வர்த்தகம் பண்ணக் கூடியதான துறைவழி வளர்ச்சி மாதிரியை நோக்கியும் நகர்வது அவசியமானது என உலக வங்கியின் புதிய அபிவிருத்தி நிலைவர அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

அபிவிருத்திக்கான அதிகமான வாய்ப்புக்களை திறந்துவிடுவதுடன் பாரம்பரியமான இடர்களுக்கு முகங்கொடுப்பதில் இலங்கை நெகிழ்வுடையதாக மாறும் அதேவேளை, இந்த புதிய வளர்ச்சி மாதிரியை நோக்கிய இலங்கையின் மாற்றத்திற்கு சிறப்பான இடர் முகாமைத்துவம் ஒத்துழைத்து வழிகோலும் என்பதற்கான வலு வான தர்க்கத்தை இந்த அபிவிருத்தி நிலவர அறிக்கை முன்வைத்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

குடும்பங்கள், நிறுவனங்கள், பொதுத்துறை மற்றும் ஒட்டுமொத்த பொருளாதாரத்திற்கான வாய்ப்புக்களை அதிகப்படுத்திக் கொள்வதற்காக இந்த இடர்களை நன்றாக முகாமைத்துவம் செய்வது அவசியமாகும்.

நிதியியல் மற்றும் வர்த்தக கொள்கை சீரமைப்புக்கள் செய்தல், பொதுக் கடன் மற்றும் உறுதியான கடன்கள் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் தொடர்பான இடர்களை முகாமைத்துவம் செய்வது தொடர்பாக அபிவிருத்தி நிலைவர அறிக்கையின் நடப்பு பதிப்பானது அவதானம் செலுத்தியுள்ளது.

வெள்ளம் மற்றும் வறட்சி காரணமாக விவசாயத்தில் ஏற்பட்ட பின்னடைவு மற்றும் கட்டடத் தொழிற்துறையிலும் வெளியகத்துறைகளிலும் ஏற்பட்ட பெரும் தாக்கம் காரணமாக 2017ஆம் ஆண்டின் முதலாவது அரையாண்டுப் பகுதியில் இலங்கையின் வளர்ச்சி 3.7 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

குறிப்பிடத்தக்க சவால்கள் காணப்பட்ட போதிலும் இந்த ஆண்டில் இலங்கை பரந்தளவில் திருப்திகரமான பொருளாதார செயற்திறனைக் காண்பிக்கின்றதுடன் 2017 இற்குள் பொருளாதார வளர்ச்சி 4.6 சதவீதத்தையடைந்து நடுத்தர காலத் திற்குள்ளாக 5 சதவீதத்தை எட்டும் எனவும் எதிர்பார்க்கப் படுகின்றது.

கடந்த மே மாதத்தில் ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து ஜி.எஸ்.பி பிளஸ் வர்த்தக வரிச்சலுகையை இலங்கை மீளப் பெற்றுக்கொண்டது.

இதேவேளை, இலங்கை அரசு, பொருளாதார சீர்திருத்த நிகழ்ச்சி நிரல் தொடர்பில் அதன் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளதுடன், கடந்த செப்ரெம்பர் மாதத்தில் புதியதோர் உள்நாட்டு வருமான சட்டம் நிறைவேற்றப்பட்டமையானது இதில் முக்கிய அம்சமாக அமைந்துள்ளது. அடிக்கடி அதிகரித்து வருகின்ற இயற்கை அனர்த்தங்கள் மேலும் தயாராகவிருக்கவேண்டியதன் அவசியத்தை உணர்த்தி நிற்கின்றன.

சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலும் இடர் அபாயங்களை நன்கு முகாமைத்துவம் செய்வது முக்கியமானதாகும்.

இதேவேளை, பேரண்ட நிதியத்தில் ஸ்திரத் தன்மையைப் பேணுதல் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் அதன் தயார்நிலைத் தன்மையை அதிகரித்துக் கொள்ளுதல் ஆகியவற்றின் மூலமாக அதன் இலக்கை அடைந்துகொள்ள முடியும் என இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலை தொடர்பில் உலக வங்கியின் அவதானிப்பை மேற்கொண்டு உலக வங்கியின் இலங்கை மற்றும் மாலை தீவுகளுக்கான சிரேஷ்ட வதிவிட பொருளியலாளரும் இந்த அறிக்கையின் படைப்பாளர்களில் ஒருவருமான ரல்ஃப் வன் டூர்ண் தெரிவித்துள்ளார்.

# மாணவர்கள் கௌரவிப்பு!





மட்டக்களப்பு,நவ. 07

மட்டக்களப்பு மாவட்டம், பெரியகல்லாறு றோசாலயா சமூகசேவை அமைப்பின் ஏற்பாட்டில் மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு, கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பெரியகல்லாறு விநாயகர் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

ஆங்கில மனப்பாட உச்சரிப்புப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு றோசாலய அமைப்பின் தலைவர், என். சவுந்தரநாயகம் தலைமையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரியகல்லாறு, கோட்டைக் கல்லாறு, ஓந்தாச்சிமடம், துறைநீலாவணை ஆகிய நான்கு கிராமங்களில் உள்ள 14 பாடசாலைகளைச் சேர்ந்த 225 மாணவர்களை உள்ளடக்கி இந்தப் போட்டி இடம்பெற்றது.

இப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில், பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர்.சுகிர்தராஜன் பிரதம அதிதியாகவும், பட்டிருப்புகல்வி வலய ஆங்கிலப் பாடத் திற்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரகாசன் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இதன்போது போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு விருந்தினர்களால் பதக்கங்கள் அணிவிக்கப்பட்டதுடன் வெற்றிக்கிண்ணங்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மண்டூரில் விபத்து; இளைஞர் சாவு

கல்முனை - மண்டூர் பிரதான வீதியில் மோட்டார் சைக்கிளுடன், பெரிய லொறி ஒன்று மோதிவிபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளில் அன்னமலை வேப்பையடியில் உள்ள தாயாரின் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த நபர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் நாவிதன்வெளி 15ஆம் கிராமத்தைச் சேர்ந்த எஸ்.நந்தகோபன் (வயது27) என்பவரே எனத் தெரிய வந்துள்ளது.

கல் ஏற்றுவதற்காக அம்பாறையிலிருந்து சவளக்கடையை நோக்கி வந்துகொண்டிருந்த பெரிய லொறி ஒன்று அன்னமலை வேப்பையடியை நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய லொறிச் சாரதியைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட நபர் களுவாஞ்சிக்குடியைச்சேர்ந்தவர்எனத்தெரிவிக்கப்படுகின்றது.

# திட்டமிடப்பட்ட வகையில் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளும் முடக்கம்

**ஹாபீஸ் நசீர் அகமட் சாட்டை**

கிழக்கு மாகாணத்தில் திட்டமிடப்பட்ட வகையில் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளும் முடக்கப்பட்டுள்ளனஎன கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் ஹாபீஸ் நசீர் அகமட் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஏறாவூரில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் கூறியவை வருமாறு:-

கடந்த 2008ஆம் ஆண்டுக்கு முன்னர் ஆளுநரின் கைகளில் கிழக்கு மாகாணசபை கொடுக்கப்பட்டு, அபிவிருத்திகள் முடக்கப்பட்டு, பாரபட்சமாக, குறிப்பிட்ட சில பகுதிகளுக்கு மட்டும் அபிவிருத்திகள் நடத்தப்பட்ட வரலாற்றுத் துரோகம் இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா? என கேட்கின்றோம்.

தேர்தலை நடத்தாமல் மாகாண சபையில் ஜனநாயகத்திற்கு விரோதமான முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்தச் செயற்பாடு தொடர்பில் மத்திய அரசு பதிலளிக்க வேண்டிய கடப்பாட்டில் உள்ளது.

கபடத்தனமாகக் கிழக்கு மாகாண சபை ஆட்சி கவிழ்ந்துள்ளது. இந்த நிலையில் அதனை தமது சுயலாபத்திற்காக அரசாங்கம் பிற்போடுகின்றது. அதற்குத்துணை போன எங்களது நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதற்குப் பதில் கூறியாக வேண்டும்.

கடந்த ஆண்டு முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவை எதிர்வரும் ஆண்டு 10ஆயிரமாக அதிகரிக்கும் பணிகளை நாங்கள் மேற்கொண்டிருந்தோம்.

ஆனால், ஆளுநர் அதனைத் தட்டிக்கழிக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றார் என நாங்கள் அறிகின்றோம்.

எதிர்வரும் ஆண்டு முன்பள்ளி ஆசிரியர்கள் 10ஆயிரம் ரூபாவைச் சம்பளமாக பெறுவதற்கு ஆளுநர் நடவடிக்கை எடுக்க வேண்டும். வேலையற்ற பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கும் நடவடிக்கைகள் இழுத்தடிப்புச் செய்யப்பட்டுள்ளன.



தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில் வேட்புமனுத் தாக்கல் கோரப்பட்டால் நியமனங்கள் வழங்கப்படுவதில் பெரிய சவால்கள் ஏற்படும்.

அத்துடன், 40புள்ளிகளுக்கு மேல் பெற்ற அனைத்துப் பட்டதாரிகளுக்கும் நியமனங்கள் வழங்கப்பட வேண்டும்.

கிழக்கு மாகாணசபை என்ற ஒன்று இருக்கின்றதா? இல்லையா? என்று கேட்குமளவுக்குக் கிழக்கு மாகாண சபையின் செயற்பாடுகள் முடக்கப்பட்டுள்ளன.

இதைத் திட்டமிட்ட, சதித்திட்டமாகவே நாங்கள் பார்க்கின்றோம். இதற்கு மத்திய அரசாங்கம் பதில் கூறியே ஆக வேண்டும்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாணத்திற்கு வெளியே ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடவும், கிழக்கில் தனித்துப் போட்டியிடுவது தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்படும் என நம்புகின்றேன் என்று தெரிவித்துள்ளார். (ப)

## வவுணதீவில் தெய்வீகக் கிராமம் நிகழ்வு!

இந்து சமய அலுவல்கள் அமைச்சு மற்றும் இந்து சமயக் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியன இணைந்து ஆண்டுதோறும் நடத்தி வரும் தெய்வீகக் கிராமம் நிகழ்வு, மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பிரதேசத்தின் நரிப்புல் தோட்டம் கிராமத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.

இதன்போது வவுணதீவுப் பிரதேசத்தின் அறநெறிப் பாடசாலைகளிலிருந்து வருகைதந்த சுமார் 400 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# திருகோணமலையில் தரித்துள்ள கப்பல்!

## தரமற்ற மசகு எண்ணெயை இறக்குமதி செய்ய இந்தியா பிரயத்தனம்?

திருகோணமலை, நவ.07

இலங்கையில் தற்போது எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகப் போக்குவரத்துச் சேவை தடைபடும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

நடளாவிய ரீதியில் எரிபொருளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக பல எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் வெறிச்சோடிக்காணப்படுகின்றன. பெருந்தொகை வாகனங்கள் தெருக்களில் எரிபொருள் இன்றி நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான நெருக்கடியைத் தீர்க்க எரிபொருள் ஏற்றிய கப்பல் இலங்கையை அண்மித்துள்ளது எனத் துறைசார் அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த நிலையில், தரமற்ற எண்ணெய்க் கப்பல் ஒன்று திருகோணமலையில் நங்கூரமிடப்பட்டுள்ளநிலையில், அதிலிருந்த எரிபொருளை நாட்டுக்குள் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன எனக் கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.பெற்றோலியத் துறைசார் ஊழியர் சங்கம் ஒன்றை மேற்கோள் காட்டி இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இந்திய எண்ணெய் நிறுவனத்தால் கொண்டு வரப்பட்ட எண்ணெய்க் கப்பல் தற்போது திருகோணமலைதுறைமுகத்திற்கு அருகில் நங்கூரமிட்டுள்ளது என ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.இந்தக் கப்பலில் தரமற்ற எரிபொருள் உள்ளது என இலங்கைப் பெற்றோலியச் சங்கத்தினால் தடைசெய்யப்பட்டதுடன், அதனை இறக்குமதி செய்யும் நடவடிக்கையும் நிராகரிக்கப்பட்டிருந்தது.திருகோணமலைத் துறைமுகத்திற்குக் கொண்டு வரும் எரிபொருளைச் சோதனையிடும் உரிமை பெற்றோலியசங்கத்திற்கு இல்லை என அதன் ஏற்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் இந்திய எண்ணெய் நிறுவனத்தால் திருகோணமலைத் துறைமுகம் ஊடாகத்தரமற்ற எண்ணெயை இலங்கையில் இறக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.நிராகரிக்கப்பட்ட எரிபொருளுக்குப் பதிலாக வேறு மசகு எண்ணெய் இதுவரையிலும் இந்தியஎண்ணெய் நிறுவனத்தால் இறக்குமதி செய்யப்படவில்லை.இந்த நிலையில் நிராகரிக்கப்பட்ட எண்ணெயைப் பெற்றுக்கொள்ளுமாறு இந்தியா தொடர்ந்து அழுத்தம்பிரயோகித்து வருகின்றது என்ற தெரியவந்துள்ளது.

கடந்த 15ஆம் திகதி IOC நிறுவனத்தால் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட 40 ஆயிரம் மெற்றிக் தொன் மசகு எண்ணெய் தரமற்றது என நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# முக்கியமான விவகாரங்கள் குறித்து மு.காவுடன் பேசவுள்ளது கூட்டமைப்பு!

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் அடுத்த வாரமளவில், முக்கிய பேச்சுக்கள் நடத்தப்பட உள்ளன என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசமைப்பு மறுசீரமைப்பு விவகாரம், கிழக்கில் தமிழ்-முஸ்லிம் விவகாரம் என்பன தொடர்பாக இந்த மாத நடுப்பகுதியில் பேச்சுக்கள் நடத்தப் படவுள்ளன.



இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அதிகாரப் பகிர்வு தொடர்பான அபிலாஷைகள் மற்றும் கிழக்கில் முஸ்லிம்களுக்கான தனி அலகு கோரிக்கை என்பன குறித்தும் இந்தப் பேச்சுக் களில்கவனம்செலுத்தப்படும்.

வரவு- செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக் கப்பட்ட பின்னர், இந்தப் பேச்சுக்கள் நடத்தப்படும். அப்போது எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களும் கொழும்பில் இருப்பார்கள்.

நாங்கள் பேச்சுக்களை நடத்த வேண்டியுள்ளது. பல வேறு காரணங்களால் இது பிற்போடப்பட்டு வந்தது.

வழிநடத்தல் குழுவில் உள்ள அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடனும் நாங்கள் பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்துவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பாக். கடற்படைக் கப்பல் இலங்கைக்கு வந்தது!



கொழும்பு, நவ. 07

பாகிஸ்தானிய கடற்படைக்குச் சொந்தமான 'பி.என்.எஸ். சைப்' கப்பல் நல்லெண்ண விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்தடைந்துள்ளது.

கொழும்பு துறைமுகத்திற்கு நேற்று முன்தினம் வருகை தந்த இந்தக் கப்பலை இலங்கை கடற்படையினர் கடற்படை மரபுகளுக்கமைய சிறப்பான முறையில் வரவேற்றனர்.

123 மீற்றர் நீளம் மற்றும் 13.2 மீற்றர் அகலத்தைக் கொண்ட இந்தக் கப்பல், 225 கடற்படை வீரர்கள் பயணம் செய்யும் வசதிகளையும் கொண்டுள்ளது.


மேலும், நாளை நாட்டை விட்டு புறப்படவுள்ள இந்தக் கப்பலின் கடற்படை சிப்பாய்கள், புறப்படுவதற்கு முன்னர் இலங்கை கடற்படையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பல்வேறு போட்டி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## நியூஸிலாந்து தூதரகம் இலங்கையில்!

கொழும்பு, நவ. 07

இலங்கையில் தூதரகத்தை அமைப்பதற்குப் பொருத்தமான இடத்தை நியூஸிலாந்து அரசு தேடி வருகிறது என இந்தியா வுக்கான நியூஸிலாந்து தூதுவர் ஜொவன்னா கெம் கேர்ஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 44 நாடுகள் தூதரகங்களைக் கொண்டுள்ளன. அதேவேளை, 89 நாடுகள், புதுடில்லியில் உள்ள தமது நாட்டின் தூதரகம் வழியாகவே இலங்கையுடனான இராஜதந்திர உறவுகளைப் பேணி வருகின்றன.



புதுடில்லியில் உள்ள தூதரகம் மூலம், இலங்கையுடனான இராஜதந்திரத் தொடர்புகளைப் பேணிவரும் நியூஸிலாந்து, கொழும்பில் தூதரகத்தை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

இலங்கையில் தமது நாடு புதிய தூதரகத்தை விரைவில் திறக்கவுள்ளது என நியூஸிலாந்து வெளிவிவகார அமைச்சர் முரே மக்கலி கடந்த மார்ச் 22 ஆம் திகதி அறிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே, கொழும்பில் புதிய தூதரகத்தை அமைப்பதற்கான இடத்தை தேடி வருவதாக, புதுடில்லியில் உள்ள நியூஸிலாந்து தூதுவர் ஜொவன்னா கெம்கேர்ஸ், புதுடில்லியில் உள்ள ஊடகவியலாளர் ஒருவரிடம் தெரிவித்துள்ளார்.

இதற்கு சில காலம் தேவைப்படும், 2018 ஆம் ஆண்டு இறுதியில் கொழும்பில் தூதரகத்தைத் திறக்கமுடியும் என்று நம்புகிறோம். அல்லது நிச்சயமாக, 2019 தொடக்கத்தில் திறந்து விடுவோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

## 3 நாள்களுக்குத் தேவையான எரிபொருளே கையிருப்பில்!

கொழும்பு, நவ. 07

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கையிருப்பில் உள்ள பெற்றோல் முடிவடைந்து கொண்டுவருகிறது என்றும் எதிர்வரும் மூன்று நாளைக்குப் போதுமான பெற்றோலே கையிருப்பில் உள்ளது எனவும் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இன்னும் மூன்று நாள்களில் பெற்றோல் விநியோகம் முழுமையாக முடிவடைந்துவிடும் எனவும் கூறப்படுகின்றது.

தற்பொழுது கூட்டுத்தாபனத்துக்குரிய முத்துராஜவல களஞ்சியசாலையில்



இருந்த அனைத்து பெற்றோலும் நிறைவடைந்துள்ளது என்றும் அத்தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

கொலன்னாவை எரிபொருள் களஞ்சியசாலையில் 3 ஆயிரம் மெற்றிக் தொன் அளவிலான எண்ணெய்யே எஞ்சியுள்ளது என்றும் கூட்டுத்தாபன வட்டாரத் தகவல்கள் கூறுகின்றன. (க)

## 75 வீத அரசியல்வாதிகள் நேர்மையற்றவர்கள்

### சந்திரிகா தெரிவிப்பு

கொழும்பு, நவ. 07

இலங்கை அரசியல்வாதிகளில் 75 சதவீதமானோர் நேர்மையான அரசியல்வாதிகள் அல்லர் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வத்தளை தொகுதியின் அதிகார சபைக்கூட்டத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

நேர்மையான நபர்கள் அரசியலில் ஈடுபடுவதில்லை. இதனால், நேர்மையற்றவர்கள் அரசியலில் நிறைந்துள்ளனர் என்றும் முன்னாள் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

## பொதுஜன முன்னணியின் முதல் பரப்புரை அனுராதபுரத்தில்!



கொழும்பு, நவ. 07

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் சிறிலங்கா பொதுஜன முன்னணியின் உள்ளூராட்சித் தேர்தல் பரப்புரைகள் ஆரம்பமாகவுள்ளன.

எதிர்வரும் 12 ஆம் திகதி புனித நகரான அனுராதபுரத்தில் உள்ள சல்காடோ மைதானத்தில் முதலாவது பரப்புரைக் கூட்டம் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

கூட்டு எதிரணியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும், சிறிலங்கா பொதுஜன முன்னணிக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். அத்துடன், இந்தக் கூட்டத்திலும் பங்கேற்கவுள்ளனர் என்று அந்தக் கட்சியின் பரப்புரைப் பேச்சாளர் சஞ்சீவ எதிரிமன்ன தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பொதுஜன முன்னணி நாடு முழுவதிலும் தாமரை மொட்டு சின்னத்தில் தனித்துப் போட்டியிடத் திட்டமிட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

காலைக்கதிர் Kalaikkathir


# தொழில்நுட்ப நகர வேலைத்திட்டம் பிரதமர் ரணிலிடம் கையளிப்பு!



கொழும்பு, நவ. 07

மேல் மாகாண பெருநகர அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் தொழில்நுட்ப நகர வேலைத் திட்டத்துடன் சம்பந்தப்பட்ட அடிப்படை திட்டங்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்படவுள்ளன.

இந்த செயற்றிட்டத்திற்காக ஹோமாகம, அத்துருகிரிய, மாலபே, கடுவெல ஆகிய நகரங்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார் என பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளர் மாதவ வைத்தியரத்ன தெரிவித்துள்ளார்.

(க)

## தினசரி ராசி பலன் 07.11.2017

*2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஐப்பசித் திங்கள் 122ஆம் நாள் செவ்வாய்க்கிழமை. சதுர்த்தித் திதி பகல் 9.51 மணிவரை. பின்னர் பஞ்சமி. நட்சத்திரம் மிருகசீரிடம் மாலை.5.29 மணிவரை. பின்னர் திருவாதிரை.சித்தயோகம் மாலை 5.29 வரை. பின்னர் அசுப யோகம்.*

**ராகுகாலம்** - *காலை 2.49 மணிமுதல் 4.17 மணிவரை.*

**சுபநேரம்** - *காலை 10.39 மணிமுதல் 12.08 மணிவரை.*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *ஐப்பசி மாத தேய்பிறைச் சதுர்த்தி*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *மிருகசீரிடம்.*

### 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** மத்திமமான நாள். பொருளாதாரம் சுமாராக இருக்கும். தேவையற்ற வீண் செலவுகள் உண்டாகும். உடல், உபாதைகளால் மருத்துவச் செலவுகள் உண்டாகும்.

**ரிஷபம்:** இன்பமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பம் குதூகலமாய் இருக்கும். குடும்பத்தில் சுபகாரியம் நடக்கும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும்.

**மிதுனம்:** யோகமான நாள். பண பலம் அதிகரிக்கும். விருப்பங்கள் நிறைவேறும். குடும்பத்தில் வெளிநாட்டு உறவினர் வருகை அதிகரிக்கும். வீடு, வாகன யோகம் உண்டாகும்.

**கடகம்:** சலனம் மிகுந்த நாள். மனதில் சிந்தனை, சஞ்சலம் அதிகரிக்கும். வருமானம் குறைந்து காணப்படும். குடும்பச் செலவுகள் அதிகரிப்பால் கடன் பட நேரும்.

**சிம்மம்:** மேன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். பதவி உயர்வில் நிலவிய தடைகள் விலகும். தூர தேசத்தில் இருந்து நல்ல செய்திகள் வரும்.

**கன்னி:** சம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். பதவி உயர்வில் நிலவிய தடைகள் நீங்கும்.

**துலாம்:** அதிர்ஷ்டமான நாள். பணம் பல வழிகளாலும் வந்து சேரும். குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக இருக்கும். ஏற்றுமதி, இறக்குமதி வாணிபத்தில் முன்னேற்றமான வழிகள் கிடைக்கும்.

**விருச்சிகம்:** சஞ்சலமான நாள். வருமானம் குறையும். வாழ்க்கைச் செலவுகள் அதிகரிப்பால் தடுமாற்றம் உண்டாகும். கடன் சுமை அதிகரிக்கும். குடும்பப் பிரச்சினைகள் அதிகரிக்கும்.

**தனுசு:** சம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். செலவீனங்கள் அதிகமாகும். குடும்ப அமைதி பேணப்படும். தொழிலில் கடின உழைப்பால் பலன் கிடைக்கும்.

**மகரம்:** ஆக்கபூர்வமான நாள். சரளமாக பணப்புழக்கம் உண்டாகும். குடும்பத்தில் கருத்தொற்றுமை உண்டாகும். எதிர்பாராத உதவிகள் தேடி வரும். சிலர் வெளிநாட்டுக்குச் செல்ல இடமுண்டு.

**கும்பம்:** நன்மையான நாள். இவர்களின் எண்ணம் ஈடேறும். குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும். பெண்களால் அனுகூலம் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு உண்டாகும்.

**மீனம்:** கவலையான நாள். வருமானம் குறையும். உடலில் ரோகங்கள் உண்டாகும். குடும்ப அமைதி குன்றும். சகோதர வழியால் எதிர்பாராத செலவுகள் உண்டாகும்.

சந்திராட்டமநாள்: விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இன்று சுபகருமங்களில் ஈடுபடுகின்றமையைத் தவிர்க்கவும்.

# பொலன்னறுவை மக்கள் சந்திப்பில் பங்குபற்றினார் மைத்திரிபால





கொழும்பு, நவ. 07

பொலன்னறுவை அரலங்வில பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்டார்.

இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் முற்பகல் இடம்பெற்றது.

திம்புலாகல கல்வி வலயத்தில் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்ற வெளிக்கந்தை பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவருக்கு ஜனாதிபதி இதன்போது பரிசில் வழங்கினார்.

183 நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி நடைபெற்ற சர்வதேச கைவினை போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற செவனபிட்டிய சமிந்தவுக்கு கிடைத்த விருது ஜனாதிபதியால் வழங்கப்பட்டது.

பிரதேசத்தில் இடம்பெறும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதி அமைச்சர்களான அநுராத ஜயரத்ன, லக்ஷ்மன் வசந்த பெரேரா, வடமத்திய மாகாண சபையின் முன்னாள் பிரதித் தலைவர் ஜயந்த மாரசிங்க, மஹிந்த ரத்னாயக ஆகியோர் கலந்துகொண்டனர்.

அந்துடன், கடந்த வறட்சியின்போது பாதிக்கப்பட்ட பொலன்னறுவைமாவட்டவிவசாய சமூகம் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பாக கலந்துரையாடல் இதன்போது நடைபெற்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் பொலன்னறுவை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

(க)

# அம்பாந்தோட்டை ஆர்ப்பாட்டம் தொடர்பில் குற்றப் பத்திரிகை ஒப்படைக்கப்படவுள்ளது



கொழும்பு, நவ. 07

அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸ் அத்தியட்சகர்துஷாரதலுவத்தவுக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பான குற்றப்பத்திரிகை ஒன்று ஒப்படைக்கப்படவுள்ளது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழு இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் மத்தள சர்வதேச விமான நிலையம் என்பவற்றை வெளிநாடுகளுக்கு குத்தகைமுறையில்வழங்கும் திட்டத்தை எதிர்த்து ஒன்றிணைந்த எதிரணியினரால் ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது, நபர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் துஷார தலுவத்தவுக்கு எதிராகக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது.

இந்தச்சம்பவம் தொடர்பான குற்றப் பத்திரிகை ஒன்றே ஒப்படைக்கப்படவுள்ளது என்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இந்தக் குற்றப் பத்திரிகை கடந்த வெள்ளிக்கிழமை தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது என அந்த ஆணைக்குழுவின் செயலாளர் ஆரிய தாஸ குரே சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஜனாதிபதி தலைமையில் நேற்று சமூகப் பாதுகாப்பு விருது விழா!

இலங்கை சமூக பாதுகாப்பு தேசிய விருது விழா 2017 ஆம் ஆண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

தாமரைத் தடாக கலையரங்கில் நேற்றுப் முற்பகல் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இலங்கை சமூக பாதுகாப்பு சபையால் நடைமுறைப்படுத்தப்படும் ஓய்வூதியம், சமூக பாதுகாப்பு நன்மை முறையை நடை முறைப் படுத்தி வழங்கப்பட்டுள்ள இலக்கை அடைந்துள்ள அரசாங்க அதிகாரிகளுக்கு ஜனாதிபதியால் விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

ஓய்வூதிய முறைமையின் நன்மைகளை மக்களிடம் கொண்டு செல்லுதல் மற்றும் ஓய்வூதிய முன்மொழிவு முறைமையை நடைமுறைப் படுத்தும் அதிகாரிகளைப் பாராட்டும் வகையில் இந்த விருது விழா வருடாந்தம் நடத்தப்படுகின்றது.

அரச சேவையில் ஓய்வூதியம் பெற்றுக் கொள்ளாத அனைவருக்கும் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நன்மைகளைத் திட்டமிடுவது இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் பணியாகும். இதன்மூலம் சுய தொழில்களில் ஈடுபடுகின்றவர்கள், தனியார் துறையில் சேவை செய்பவர்கள், வெளிநாட்டு சேவைகளில் ஈடுபட்டுள்ளவர்கள், கலைஞர்கள், சுதேச மருத்துவர்கள் போன்ற அனைத்து துறைகளையும் இது உள்ளடக்கியுள்ளது.



# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



149




## அத்தியாயம் - VIII

## பாலா கடுமையாக நோயுற்றார்

வனீதா எமது பழைய நண்பி, தமிழீழ காவல்துறையின் பொறுப்பாளர் நடேசனின் மனைவி. இவர்கள் எமது வீட்டுக்கு அண்மையில் வசித்து வந்தனர். பாலா சுகவீனமுற்ற பொழுது வனீதா எமது வீட்டுக்கு அடிக்கடி வந்து செல்வார். சில சமயங்களில் கணவருடன் குடும்பமாக வருவார். எமது வீட்டுக்கு வரும் போது தன்னால் முடிந்த உதவிகளைச் செய்வார். சிறுநீரக நோய் என்பதால் மருத்துவர்கள் பாலாவின் சாப்பாட்டில் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்திருந்தனர். எனவே, நான் வழமையாக சமைத்து வந்த உணவு வகைகளைச் சமைக்க முடியவில்லை. இதனால் எனது சமையலும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அதேவேளை, பாலாவுக்குச் சத்துணவு கொடுக்க வேண்டும். வித்தியாசமான உணவு வகைகளைச் சமைப்பதற்கு நான் வனீதாவிடம் ஆலோசனை கேட்பேன். அவர் யோசனைகள் கூறுகின்றமை மட்டுமன்றி, வித்தியாசமான உணவு வகைகளைச் சமைப்பதில் எனக்குப் பயிற்சியும் தருவார்.

ஒரு வெள்ளைக்காரப் பெண்ணுக்கு ஒரு சிங்களப் பெண்மணி தமிழ் உணவு வகைகளைச் சமைப்பது பற்றி பயிற்சி அளிப்பதென்பது ஒரு விநோதமான விடயம் தான். அதுவும் தமிழ் மொழியில் நாம் கதைத்துப் பேசி, தமிழ் உணவுகளைச் சமைக்கும் வேடிக்கையைப் பார்த்தவர்கள் சிரிக்கத்தான் செய்தார்கள். நடேசனும் வனீதாவும் எமது குடும்ப நண்பர்கள். நடேசன் எமது வீட்டுக்கு அடிக்கடி வந்து செல்வார். அப்பொழுதெல்லாம் தமிழீழ காவல்துறையின் நிர்வாகம் பற்றி அவர் பாலாவுடன் கலந்தாலோசனைகள் நடத்துவார். பாலாவின் கருத்துக்களை அவர் அக்கறையுடன் செவிமடுப்பார். தமிழீழ காவல்துறையில் புதிதாக சேர்க்கப்பட்ட உறுப்பினர்களுக்குத் தொடர்ச்சியாகப் பல வகுப்புக்களை நிகழ்த்தி இருக்கிறார் பாலா. போரால் பொது மக்களுக்குப் பெரிய சமூக பொருளாதாரப் பிரச்சினைகள் தோன்றியுள்ளன என்பதைச் சுட்டிக்காட்டி, குற்றத்தைத் தடுத்துச் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் கடமைகளில் மனிதாபிமான அணுகுமுறையைக் கடைப்பிடிக்குமாறு பாலா தமது வகுப்புகளில் வலியுறுத்துவார். குற்றங்களுக்குப் பின்னணியிலுள்ள சமூக, பொருளாதாரச் சிக்கல்களைக் கருத்தில் எடுத்து, பொதுமக்களை அன்புடனும் கருணையுடனும் அணுகுவதன் அவசியத்தையும் எடுத்து விளக்குவார்.

சட்டம், ஒழுங்கை நிலைநிறுத்தும் விடயத்தில், சில சமயங்களில் காவல்துறை அதிகாரிகள் கடுமை நடவடிக்கை எடுக்கும் பொழுது, பொது மக்களிடமிருந்து பாலாவுக்கு முறையீடுகள் வருவதுண்டு. அப்பொழுதெல்லாம் மக்களின் மனச்சாட்சியாக நின்று இந்த முறையீடுகள் பற்றி நடேசனுடன் கலந்துரையாடுவார் பாலா. நடேசன் ஒரு மூத்த உறுப்பினர். முற்போக்குச் சிந்தனை உடைய அரசியல் பின்னணியை உடையவர். ஆகவே, நாம் கூறும் கருத்துக்களுக்கு அவர் மதிப்பளிப்பார். நாம் முன்வைக்கும் விமர்சனங்களையும் ஆக்கபூர்வமாக எடுத்துக் கொள்வார்.

புதுவையின் மனைவியான ரஞ்சினியும் எனக்கு உதவியாக இருந்தார். பாலா விரும்பி உண்ணும் சுவையான உணவுகளைத் தயாரித்து அனுப்பி வைப்பார். சில சமயங்களில் சூசையின் மனைவி சுதாவும் எமது வீட்டுக்கு வருகை தந்து உணவு தயாரிப்பதில் எனக்கு உதவி செய்வார்.

மோசமடைந்திருந்த பாலாவின் உடல்நிலை குறித்து வைத்தியர் சூரி, பிரபாகரனுக்கு அடிக்கடி அறிக்கைகளை அனுப்பி வைப்பார். ஏனைய மருத்துவர்களும் பாலாவின் நோய் பற்றித் தமது அபிப்பிராயங்களைப் பிரபாகரனுக்குத் தெரியப்படுத்தினர். சிறுநீரக முடக்கத்துக்குச் சிகிச்சை வசதிகளுள்ள ஒரு நவீன மருத்துவமனையில் பாலாவை அனுமதிக்க வேண்டுமென்றும், அதற்கு அவரை காலம் தாழ்த்தாது உடனடியாக வெளிநாடு ஒன்றுக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்றும் மருத்துவர்கள் கூட்டாகக் கருத்துத் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து, அவசர சிகிச்சைக்காகத் தமிழ் நாட்டுக்கு பாலாவை அனுப்பி வைக்கின்றமை பற்றி ஆராய்ந்தோம். இந்த யோசனைக்கு தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் சிலர் ஆதரவும் அனுதாபமும் தெரிவித்த போதும், எமது இயக்கம் மீது இந்திய அரசு தடைவிதித்திருந்த காரணத்தால் இந்தியா செல்கின்றமை ஆபத்தான காரியம் என்பதை உணர்ந்தோம். நோர்வே அரசின் உதவியை நாடுமாறு எமது சர்வதேச செயலகத்துக்குப் பிரபாகரன் பணித்திருந்தமையைத் தொடர்ந்து இந்த வெளிநாட்டின் உதவியை நம்பி நாம் ஆவலுடன் காத்திருந்தோம்.

## சந்திரிகாவின் நிபந்தனைகள்

இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஏ.சி.எஸ்.ஹமீது, நோர்வே அரசுடன் நெருங்கிய தொடர்புடையவர். கொழும்பிலுள்ள நோர்வேயின் தூதுவர் ஜோன் வெஸ்போக்கின் நண்பர். எதிர்காலத்தில் சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் சமாதானப் பேச்சுகள் நடைபெறும் பட்சத்தில் பாலா முக்கிய பங்கு வகிப்பார் என்றும் அவரது உடல் நலம் தேறுவதற்கு நோர்வே அரசு உதவ வேண்டுமென்றும் ஹமீது நோர்வேயின் தூதுவருக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார். இதனையடுத்து பாலாவுக்கு உதவ நோர்வே அரசு முன் வந்தது. முதலில் அவரது நோயும்,



உடல்நிலை பற்றியும் அறிந்து கொள்ளும் பொருட்டு நோர்வே அரசு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை நாடியது.

இதனைத் தொடர்ந்து, கொழும்பிலுள்ள செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி மக்ஸ் ஹட்ரன், ஒரு மருத்துவ நிபுணருடன் புதுக்குடியிருப்பிலுள்ள எமது வீட்டுக்கு வருகை தந்து பாலாவின் உடல்நிலையைப் பரிசோதனை செய்தார். ''பாலாவை உடனடியாக வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்க வேண்டும்'' என வற்புறுத்திய செஞ்சிலுவைச் சங்க மருத்துவர், பாலா வின் இரத்த, சிறுநீர்மாதிரிக் கூறுகளை மேலதிக பரிசோதனைக்காகக் கொழும்புக்கு எடுத்துச் சென்றார்.

மனிதாபிமான அடிப்படையில், பாலாவை வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கும் திட்டத்துடன் நோர்வே அரசும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை அணுகின. சிறுநீரக செயலின்மையால் பாலா கடுமையாக நோயுற்றிருக்கிறார் என்ற செய்தியை சந்திரிகாவுக்கு அறிவித்த அவர்கள், வெளிநாட்டுக்கு அவர் அழைத்துச் செல்லப்பட வேண்டும் என்றும் அதற்கு நோர்வே அரசு உதவத் தயாராக இருக்கிறது எனவும் தெரிவித்தார்கள்.

எதிர்காலத்தில், சிறிலங்கா அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் மத்தியில் சமாதானப் பேச்சு நிகழும் பட்சத்தில் பாலாவின் பங்கு முக்கியமானதாக அமையும் என்பதால், அவரது உடல் நிலை தேற உதவுவது அவசியமெனவும் நோர்வே தூதுவர் சந்திரிகா அம்மையாருக்கு எடுத்து விளக்கினார். இந்தப் பிரச்சினை சம்பந்தமாக கொழும்பில் நீண்ட மந்திராலோசனைகள் நிகழ்ந்தன. இந்த இரகசிய கலந்துரையாடல்களில் வெளிவிவகார அமைச்சரும் சந்திரிகாவின் ஆலோசகருமான கதிர்காமரும் கலந்துகொண்டார். ஆக்கபூர்வமான முறையில் பேச்சுகள் நடைபெறுகின்றன எனவும், பாலாவை வெளி நாட்டுக்கு அனுப்பும் நடைமுறைகள் பற்றியும் கலந்தாலோசிக்கப்படுகிறது எனவும் நோர்வே அரசு ஒஸ்லோ நகரிலுள்ள எமது இயக்கப் பிரதிநிதிகள் வாயிலாக எமக்குத் தெரியப்படுத்தியது.

இந்தச் செய்திகள் எமக்கும், பிரபாகரனுக்கும் நிம்மதியைக் கொடுத்தன. இந்தச் செய்திகளால் ஊக்கமடைந்த பிரபாகரன், மனிதாபிமான நல்லெண்ண நடவடிக்கையாக விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒன்பது போர்க் கைதிகளை விடுதலை செய்தார். இதனைத் தொடர்ந்து சந்திரிகா குமாரதுங்க அரசிடமிருந்து ஒரு நல்ல செய்தியை நாம் எதிர்பார்த்துக் காத்திருந்தோம். நாள்கள் பல கழிந்தன. அரசிடமிருந்து பதில் எதுவும் கிடைக்கவில்லை.

பாலாவின் உடல்நிலையும் மோசமாகி வந்தது. விரக்தியடைந்த நாம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைத் தொடர்பு கொண்டோம். தமது அமைப்பு மீது கதிர்காமர் சந்தேகமும் நம்பிக்கையீனமும் கொண்டுள்ளமையால், பாலாவின் பிரச்சினை சம்பந்தப்பட்ட விவகாரத்தில், செஞ்சிலுவைச் சங்கத்தை ஓரங்கட்டி வைத்திருப்பதாக அந்த நிறுவனத்தின் பிரதிநிதி எமக்குத் தெரிவித்தார். இது எமக்கு ஆழ்ந்த ஏமாற்றத்தைக் கொடுத்தது. ஏக்கத்துடன் எதிர்பார்த்திருந்து இரண்டு மாதங்கள் கழிந்த பின்னர், இறுதியில் நோர்வே அரசிடமிருந்து பதில் வந்தது. பாலாவை வெளிநாட்டுக்கு அனுப்ப உதவி செய்வதானால், 'மனிதாபிமான' முயற்சிகளாக சில நிபந்தனைகளை (உறுதிப்பாடுகளை) விடுதலைப் புலிகள் இயக்கம் நிறைவு செய்ய வேண்டும் என சந்திரிகாவும், கதிர்காமரும் இணைந்து ஒரு பட்டியல் தயாரித்திருக்கின்றனர் என நோர்வே அரசு எமக்குத் தெரிவித்தது.

(தொடரும்...)



ஜமுனாநந்தா சிவநாதன்

# பொல்லாத டெங்கு நோய்

## கவனிக்காவிடில் முக்கிய அங்கங்கள் செயலிழக்கும் ஆபத்து

**01)டெங்கு காய்ச்சல் என்றால் என்ன?**

டெங்குநோய், பிளேவி வைரஸ் கிருமியால் ஏற்படும் நோய்நிலை. இந்நோய்க்கிருமி தொற்றிய எயிடிஸ் (AEDES) நுளம்பு கடிப்பானால் நோய் தொற்றுகின்றது. டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட வர்கள் சில வேளைகளில் மூக்கு, வாய், தோற்பகுதியில் குருதிக் கசிவுக்குட்படுவர். அரிதாகக் குருதி அமுக்கம் குன்றி அதிர்ச்சி நிலைக்குச் செல்வர்.

**02)டெங்குநோய் எவ்வாறு பரவுகின்றது?**

டெங்குநோய் எயிடிஸ் நுளம்பினால் பரவுகின்றது. எயிடிஸ் நுளம்பு நோயாளி களைக் கடித்துவிட்டு பின் சுகதேகியைக் கடிக்கும்போது நோய்க்கிருமி மற்றவருக் குப் பரப்பப்படுகின்றது.

**03)டெங்குநோய்க் கிருமித் தொற்றின் பின் எவ்வளவு விரைவில் நோய் அறிகுறிகள் தோன்றும்?**

தொற்றுடைய நுளம்பு கடித்தலில் இருந்துநோய்அறிகுறிகள்தோன்றுவதற்கு சராசரியாக 4 தொடக்கம் 6 நாள்கள் வரை செல்லலாம். ஆனால் 3 தொடக்கம் 14 நாள்களில் அறிகுறிகள் ஏற்படும். டெங்குநோய்க் கிருமித் தொற்றுடைய ஒருவர் நேரடியாக இன்னொருவருக்கு நோயைப் பரப்பமாட்டார். மாறாக எயிடிஸ் நுளம்பிற்கு ஒரு நோய் முதலாக ஆறு நாள்கள் வரை காணப்படுவர்.

**04)யாருக்கு டெங்குநோய் அபாயம் அதிகம் உள்ளது?**

தொற்றுடைய எயிட்ஸ் நுளம்பால் கடியுண்ட எந்நபரும் டெங்குநோயால் பாதிக்கப்படலாம். ஆபத்தான குருதி கசியும் டெங்கு நோய் ஏற்படுவது ஒருவ ரது வயது, உடலின் எதிர்ப்புச்சக்தி, தொற்றடைந்த டெங்கு வைரஸின் வகை என்பவற்றில் தங்கி உள்ளது. ஏற்கனவே ஒருவகை அல்லது பலவகை டெங்கு வைரஸின் தொற்றுத லுக்கு உள்ளான வர்கள் குருதிக் கசிவுடனான ஆபத்தான டெங்குநோய்த் தாக்கத்திற்கு உள்ளா கும் சாத்தியம் அதிகமாகும்.

**05) டெங்குநோய்த் தொற்று ஏற்பட்டுள்ளது என எப்பொழுது ஐயுறல் வேண்டும்?**

உங்களுக்கு சடுதியாக கடுமையான காய்ச்சல் ஏற்பட்டால் (103°f - 105°f) இதன்போது கடுமையான தலைவலி பொதுவாக நெற்றியில் ஏற்படும். கண் களுக்குப் பின்னால் நோ ஏற்படும். உடம்பு நோ இருக்கும். தோலில் புள்ளிகள் ஏற் படலாம். வாந்திக்குணம், வாந்தி எடுத்தல் ஏற்படலாம். இவ் அறிகுறிகள் 5 -7 நாள்களுக்கு இருக்கலாம். சிலருக்கு காய்ச்சல் 3 ஆம், 4 ஆம் நாள்களில் நின்று பின் மீளவும் தோன்றலாம். இவ்வறிகுறிகள் யாவும் ஒருவரில் ஒரே நேரத்தில் ஏற்படுவதில்லை. இவற்றில் இரண்டு, மூன்று அறிகுறிகள் இருந்தா லேயே டெங்கு நோய் என அவதானம் வேண்டும்.

**டெங்குநோய்த் தொற்று ஏற்பட்டுள்ளது என எப்பொழுது ஐயுறல் வேண்டும்?**

உங்களுக்கு சடுதியாக கடுமையான காய்ச்சல் ஏற்பட்டால் (103°F - 105°F) இதன்போது கடுமையான தலைவலி பொதுவாக நெற்றியில் ஏற்படும். கண் களுக்குப் பின்னால் நோ ஏற்படும். உடம்பு நோ இருக்கும். தோலில் புள்ளிகள் ஏற் படலாம். வாந்திக்குணம். வாந்தி எடுத்தல் ஏற்படலாம். இவ் அறிகுறிகள் 5 -7 நாள்களுக்கு இருக்கலாம். சிலருக்கு காய்ச்சல் 3 ஆம், 4 ஆம் நாள்களில் நின்று பின் மீளவும் தோன்றலாம். இவ்வறிகுறிகள் யாவும் ஒருவரில் ஒரே நேரத்தில் ஏற்படுவதில்லை. இவற்றில் இரண்டு, மூன்று அறிகுறிகள் இருந்தாலேயே டெங்கு நோய் என அவதானம் வேண்டும்.



**06)வெவ்வேறு காய்ச்சல்களிற்கு மத்தியில் டெங்குக் காய்ச்சல் தான் என்று எவ்வாறு அறிவது?**

ஏனைய காய்ச்சல்களில் இருந்து டெங்குக் காய்ச்சலை வேறுபடுத்துவது கண்களுக்குப் பின்பான நோ, கடுமை யான தசை நோ, கடுமையான மூட்டு நோ, மற்றும் தோலில் ஏற்படும் புள்ளிகள், மூட்டுக்களில் ஏற்படும் நோ, டெங்குக் காய்ச்சலை எலும்புடைக்கும் காய்ச்சல் என அழைக்கக் காரணமாகின்றது.

**07) டெங்கு நோயை உறுதிப்படுத்துவது எவ்வாறு?**

நோய் அறிகுறிகளுடன் மட்டுமல் லாது, ஆய்வுகூடச் சோதனைகளும் டெங்கு நோய் தொற்றை உறுதிப்படுத்த உதவுகின்றன. வெவ்வேறு விதமான ஆய்வுகூடப் பரிசோதனைகள் உள்ளன. ஆனால், அவை நம்பகமான ஆய்வு கூடங் களில் மேற்கொள்ளப்படல் வேண் டும். டெங்கு வைரஸின் பிறபொருள் ஆரம்பத்திலேயே கண்டறியப்படலாம். டெங்கு வைரஸ் தொற்றால் உடலில் ஏற் படும் பிறபொருளெதிரியை நோய்த் தொற்றின் ஐந்து நாள்களின் பின்பே கண்டறியலாம்.

**08)இரண்டு தடவைகள் டெங்கு நோய் ஏற்படுமா?**

டெங்கு நோய் ஒரு தடவைக்கு மேல் ஏற்படுவதற்கு சாத்தியங்கள் உள்ளன. டெங்கு வைரஸில் நான்கு உப வகைகள் உள்ளன. ஒரு தடவை ஒரு வகை வைரஸ் தொற்று ஏற்பட்டால் மறு தடவை மற்றைய வைரஸ் தொற்று பாதிப்பு ஏற்படலாம். இதன்போது உடலில் ஏற்படும் பாதிப்புக் கள் அதிகமாகலாம்.

**09) ஒருவர் எவ்வாறு டெங்குக் காய்ச்சலினால் பாதிக்கப்படுவார்?**

டெங்குக் காய்ச்சல் நோய் தொற்றுள்ள எயிடிஸ் நுளம்பு கடிப்பானால் ஏற்படும். இந்நுளம்பு சாதாரண நுளம்பிலும் சிறிய பருமன் உடையது. வெள்ளைப்புள்ளி உடைய உடம்பையும், கால்களையும் உடையது. இது சுத்தமான நீரில் பெரு கும் தகையது. 100 - 200 மீற்றர் தூரம் பறக்கக்கூடியது. ஏற்கனவே தொற்றுடைய ஒருவரைக் கடிப்பதில் இருந்து டெங்கு வைரஸை இந் நுளம்பு பெற்றுக் கொள் ளும்.

**10)இன்னொருவரிலிருந்து டெங்குக் காய்ச்சல் தொற்றுமா?**

டெங்கு நோய் தொடுகையால் பரவும் நோய் அல்ல. இது தொற்றுடைய எயிடிஸ் நுளம்பு கடிப்பானாலேயே பரவுகின்றது.

டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட வரை எயிடிஸ் நுளம்பு கடித்தால், பின் அந் நுளம்பு இன்னொருவருக்கு கடிக் கும்போது, பின்னையவர் நோய்த் தொற் றுக்குள்ளாகின்றார். எனவே டெங்கு நோயாளிகளை நுளம்புக்கடியில் இருந்து பாதுகாப்பதனால் நோய் பர வலைக் கட்டுப்படுத்தலாம்.

**11)டெங்கு நோய்க்கிருமி தொற்றிய ஒருவர், நோய் அறிகுறி இன்றி இருப்பாரா?**

டெங்கு நோய்க்கிருமி தொற்றிய பலர் நோய் அறிகுறி இன்றி ஆரோக்கிய மாகவும் காணப்படலாம். டெங்கு நோய்க் கிருமி தொற்றியவர்களில் 80 வீதமா னோர் இவ்வாறு காணப்படுவர். டெங்கு நோய்க்கிருமி தொற்றியவர்களில் 15 வீதமானோர் டெங்குக் காய்ச்சலுக்கு உட்படுவர். டெங்கு நோய்க்கிருமி தொற் றியவர்களில் 5 வீதமானோர் கடுமை யான நோய்த் தாக்கத்துக்கு உட்படுவர். பொதுவாக ஒரு டெங்கு நோயாளி இனங்காணப்படும்போது சூழலில் 4 பேர் டெங்கு நோய்க்கிருமி காவிகளாகக் காணப்படுவர்.

**12)டெங்கு நோயாளிகள் வீட்டில் இருந்த வாறே சிகிச்சையைப் பெறலாமா?**

பெரும்பாலான டெங்கு நோயாளிகள் சிகிச்சையை வீட்டில் இருந்தவாறே பெறலாம் அவர்கள் வேலைகள் செய் யாது ஓய்வில் இருத்தல் அவசியம். போதி யளவு நீராகாரம் அருந்துதல் வேண் டும். ஜீவனியையும் பருகலாம். போஷாக் குள்ள உணவுகளை உண்ணல் வேண் டும்.

● காய்ச்சலைக் கட்டுப்படுத்த,

★காய்ச்சல் இருப்பின் சரியான அளவில் ஆறு மணித்தியாலத்திற்கு ஒரு முறை பரசிட்டமோல் மருந்தை உட் கொள்ளல்.

★கடுமையான காய்ச்சல் இருப்பின் துப்புரவான துணியை வெந்நீரில் நனைத்து நோயாளியின் உடம்பை ஒத்தடம் செய்யவும்.

★வேறு நோய்களுக்கு தொடர்ச்சி யாக மருந்து உட்கொள்பவர். எனின் அது தொடர்பாக வைத்தியரிடம் கூற வும்.

(உ-ம் : நீரிழிவு, குருதி தொடர்பான நோய்கள்)

X கடுமையான காய்ச்ச லைக் குறைப்பதற்கு அஸ்பிரின் / வலி நிவா ரணிகள் (NSAIDs: டைக்லோபினக்அமிலம், இபுப்ரோபன்) போன்ற மருந்துகளைத் தவிர்க்க வேண்டும்.

குறிப்பிட்டளவு நீர் ஆகாரங்களை உட் கொள்ளவும்.

வளர்ந்தவர்களுக்கு :- ஒரு நாளைக்கு 2 - 2 $^{1}/_{2}$ லீற்றர்)

குழந்தைகளுக்கு :- கீழ் உள்ள அட்ட வணைப் படி குறிப்பிட்ட அளவு நீர் ஆகா ரம் வழங்கவேண்டும்.


(11 ஆம் பக்கம் பார்க்க...)

| குழந்தையின் நிறை Kg | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|
| நீர் ஆகார அளவு ml | 300 | 400 | 500 | 600 | 700 | 800 | 900 | 1000 |
| கோப்பை | 1½ | 2 | 2½ | 3 | 3½ | 4 | 4½ | 5 |

| குழந்தையின் நிறை Kg | 12 | 14 | 16 | 18 | 20 | 25 | 30 | 35 |
|---|---|---|---|---|---|---|---|---|
| நீர் ஆகார அளவு ml | 1100 | 1200 | 1300 | 1400 | 1500 | 1600 | 1700 | 1800 |
| கோப்பை | 5½ | 6 | 6½ | 7 | 7½ | 8 | 8½ | 9 |

காலைக்கதிர்
Kalaikkathir





# டெங்கு நோயினால் உயிரிழப்பு ஏற்படுமா?

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

திரவங்களை அளப்பதற்கு சரியான அளவிலான பாத்திரத்தை பயன்படுத்தவும்.

ஒரு நாளைக்குத் தேவையான நீர் ஆகாரம் குறிப்பிட்ட நேர இடைவெளிகளில் (நோயாளியின் தேவைக்கு ஏற்ப) வழங்கப்பட வேண்டும்.)

**வெற்றுநீரை விட ஆகாரம் உட்கொள்ளல் சிறந்தது**

★ புதிய பழரசம் ★கஞ்சி

★இளநீர்

★மெதுவான உணவு வகைகளை உட்கொள்ளல் சிறந்தது.

● அரைத் திண்மநிலை மற்றும் மெதுவான உணவுகளை வழங்கவும்.

● சிறிய அளவு உணவை பலமுறை வழங்கவும்.

● போஷாக்கான மற்றும் இயற்கை உணவுகளை உட்கொள்ளல் சிறந்தது.

● அதிக எண்ணெய் கலந்த உணவு வகைகள் வாந்தி மற்றும் குமட்டல் என்பவற்றை ஏற்படுத்தும் என்பதால் இவற்றை தவிர்க்கவும்.

● சிறு குழந்தைகளுக்கு குளுக்கோஸ் ஃ பிரக்டோஸ் போன்ற சீனிவகைகள் கலந்த திரவ உணவுகளை சிறு இடைவேளைகளில் தொடர்ச்சியாக வழங்கவும்.

● பழ வகைகளை உட்கொள்ளல் சிறந்தது.

X சிவப்பு மற்றும் கபில நிற உணவுகள் பானங்களைத் தவிர்க்கவும். (தேநீர், கோப்பி, நிற குளிர்பானங்கள், பீற்றூட் போன்ற உணவுகள், மாமைட், திராட்சை)

**13)டெங்கு நோய்க்கான சிகிச்சை யாது? டெங்கு நோய் குணப்படுத்தக்கூடியதா?**

பொதுவான ஏனைய வைரஸ் நோய்களைப் போல் டெங்கு நோய்க்கும் குறிப்பிடத்தக்க குணப்படுத்தக்கூடிய மருந்துகள் இல்லை. பரசிற்றமோல் குளிசை காய்ச்சலையும் மூட்டுநோய்களையும் கட்டுப்படுத்தும். ஏனைய பக்றீரியா தொற்றுக்களை தவிர்ப்பதற்கே நுண்ணுயிர் கொல்லிகள் உபயோகிக்கப்படும்.

**14)டெங்கு காய்ச்சலின்போது தவிர்க்க வேண்டிய மருந்துகள்?**

அஸ்பிரின், புருபன், வோல்டாரன் போன்ற மருந்துகள் ஆபத்தானவை.

**15)டெங்கு நோய் ஆபத்தானதா?**

டெங்கு நோய் குருதிக் கலன்களைப் பாதிக்கின்றது. இதனால் பிளாஸ்மா கசிவு, குருதிக்கசிவு ஏற்படும். குருதிப்பெருக்கும் ஏற்படலாம். இதனால் முக்கிய அங்கங்கள் செயலிழக்கலாம். குருதியமுக்கம் குறையலாகாது.

**16)டெங்கு நோயினால் உயிரிழப்பு ஏற்படுமா?**

டெங்கு நோயினால் பாதிக்கப்படுபவர்களுக்கு உயிராபத்து இல்லை. ஆனால் டெங்கு நோயின்போது குருதிக்கசிவு நிலை ஏற்பட்டு குருதியமுக்கம் குறையும் நிலை ஏற்பட்டால் அபாயகரமானது. இந்நிலையில் உரிய சிகிச்சையை சரியான நேரத்தில் வழங்குவதால் முற்றாக மீள முடியும்.

**17)டெங்கு நோயினால் பாதிக்கப்படுபவர்கள் எப்பொழுது வைத்தியரை நாடவேண்டும்?**

குருதிப்பெருக்குடனான டெங்கு காய்ச்சல் நிலை அல்லது குருதியமுக்கம் குன்றும் நிலை காய்ச்சல் தொடங்கி 3-5 நாள்களின் பின்பே நிகழும். இந்நிலையின் போது நோயாளிக்கு காய்ச்சல் இருக்கமாட்டாது. காய்ச்சல் குணமடைந்துவிட்டது என நினைப்பர். ஆனால், இக்காலமே மிகவும் ஆபத்தான காலமாகும்.

இதன்போது அபாய அறிகுறிகளாக:

1.கடுமையான வயிற்றுவலி ஏற்படும்.

2.தொடர்ச்சியான வாந்தி ஏற்படும்.

3.தோலில் குருதி கசிந்த அடையாளங்கள் காணப்படும்.

4.மூக்கில் இருந்து குருதி கசியும்.

5.மலம் கறுப்புநிறமாக் காணப்படும்.

எனவே, காய்ச்சல் நோயாளிகளில் வயிற்று நோவோ, வாந்தியோ காணப்படின் வைத்தியசாலையில் உடன் அனுமதித்தல் அவசியமாகும்.

குருதி கசியத்தொடங்கிய பின்பான சிகிச்சைகள் கடினமானவையாகும்.

குருதியமுக்கம் குறை டெங்கு நிலை (Dengu Shock Syndrome DSS) மிகவும் ஆபத்தானதாகும். இதன் அறிகுறிகளாக,

1.அதிக தாகம்.

2.உடல் வெளிறி தோல் குளிர்ந்து போதல்.

3.அமைதியின்மை.

4.இயலாத தன்மை.

5.சிறுநீர் அளவு குறைதல்.

என்பன காணப்படும்.

**18)டெங்கு நோயைத் தடுப்பதற்கான மருந்து யாது?**

தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆனால் முற்றாக பாவனைக்கு வரவில்லை.

**19)டெங்கு நோயால் பாதிக் கப்பட்டவர்களுக்கு நீண்டநாள் தாக்கம் யாது?**

பொதுவாக டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஓரிரு கிழமைகளில் பூரண சுகமடைந்துவிடுவர். சிலர் சில வாரங்களுக்குச் சோர்வாகக் காணப்படுவர். நீண்டநாள் பாதிப்புக்கள் இல்லை.

**20)டெங்கு நோயைப் பரப்பும் நுளம்பின் வாழிடம் யாது?**

டெங்கு நோயைப் பரப்பும் எயிடிஸ் நுளம்பு வீட்டினுள்ளேயே குடியி ருக்கின்றது. உடுப்புக்கள் உள்ள இடம், இருளான இடங்கள், குளிரான இடங்கள் மற்றும் வீட்டைச்சூழவுள்ள ஒதுக்கிடங்களிலும் நுளம்பு வாழும். பெண்நுளம்பு நீர் உள்ள இடங்களில் முட்டைகளை இடும். முட்டை குடம்பியாகி முழுவுடலியாக 10 நாள்களில் உருமாற்றம் பெற்றுவிடும்.

**21)டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் பெருகுவதை எவ்வாறு கட்டுப்படுத்துவது?**

நிலையான நன்னீரில் டெங்கு நுளம்பு பெருகுகின்றது. வீட்டுச் சூழலிலுள்ள வாளிகள், பேணிகள், பிளாஸ்ரிக் பொருள்கள், டயர்கள், போத்தல்கள் என்பவற்றில் இவை பெருகும். வீடுகளின் உள்ளே உள்ள குளிரூட்டிகளின் நீர், நீர்த்தாங்கிகளில் வடியும் நீரும் நுளம்பு பெருகக் காரணமாகின்றன. இவற்றைத் துப்புரவு செய்தல் அவசியம். சிறிய நீர்நிலைகளில் மீன்களை வளர்ப்பதால் நுளம்பு பெருகாது. மேலும் தும்பிகளும், நுளம்புக் குடம்பிகளை இயற்கையான உணவாகக் கொள்ளும்.

**22)நுளம்புக் கடியை எவ்வாறு தவிர்த்து டெங்கு நோய் ஏற்படுவதைத் தடுக்கலாம்?**

ஒருவரைக் கடிக்கும் எயிடிஸ் நுளம்பு டெங்கு வைரஸை உடையதா அல்லது இல்லையா என்று உறுதிப்படுத்த முடியாது. எனவே மக்கள் நுளம்புக்கடியில் இருந்து தவிர்ப்பதனாலேயே நோய்த் தொற்று ஏற்படாது பாதுகாக்கப்படலாம். எயிடிஸ் நுளம்பு மனிதரைக் கடிக்கும் உக்கிரம் சூரிய உதயத்தின் பின் இரண்டு மணித்தியாலங்களிலும், சூரிய அஸ்தமனத்தின் முன் இரண்டு மணித்தியாலங்களிலும் இருக்கும். இந் நுளம்புக் கடியைத் தவிர்க்க உடல் முழுவதும் மூடிய ஆடைகளை அணிதல் வேண்டும். இறுக்கமான ஆடைகளைஅணியக்கூடாது. தளர்வான ஆடைகளே நல்லது. சிறு பிள்ளைகளை நுளம்பு வலைகளில் பாதுகாக்க வேண்டும். நுளம்புத்திரிகள் மற்றும் வேப்பிலைப்புகை என்பனவும் பயன்படுத்தலாம். ஆனால் வெகுவாகப் பாதிப்புக்கள் ஏற்படலாம்.

**வேறு நோய்களுக்கு மருந்து உட்கொள்ளுவோர் அது தொடர்பாக வைத்தியரிடம் கூற வேண்டும். குறிப்பாக நீரிழிவு, குருதி தொடர்பான நோய்கள்.**



**23)டெங்கு நோயால் பாதிக் கப்பட்ட ஒருவர் எவ்வாறு மற்றவர் களுக்கு பரவுவதை தடுக்கலாம்?**

டெங்கு நோய், டெங்கு நோயாளியின் உடலைக் கடிக்கும் எயிடிஸ் நுளம்பால் பரப்பப்படுகின்றது. எனவே, டெங்கு நோயாளிகள் நுளம்புகளால் கடி படாது பாதுக்காக்கப்படுவதனால் ஏனையவர்களுக்கு நோய் பரவாது.



**24) ஒருவர் டெங்கு நோய் நிலவும் பிரதேசத்திற்கு பிரயாணம் செய்வதனால் ஆபத்து உண்டா?**

டெங்கு நோய் உள்ள பிரதேசங்களுக்கு செல்வதற்கு பிரயாணத்தடை இல்லை. ஆனால், அப்பிரதேசங்களில் நுளம்பால் கடிபடாது இருப்பதற்கான தடுப்புக்களை மேற்கொள்ள வேண்டும். மேலும் அப்பிரதேசத்தில் உள்ளபோது, மீண்டும் இரு வாரத்திற்குள் காய்ச்சல் ஏற்படின் வைத்தியரை நாடவேண்டும்.

**25)டெங்கு நோயைத் தடுக்க சமூகம் யாது செய்யலாம்?**

வீட்டுச் சூழலிலேயே டெங்கு நோய் பரவுகின்றது. எனவே வீட்டினுள்ளேயும் அதனைச் சூழவும் நுளம்பு பெருகும் இடங்களை அழிப்பதனாலும், நீர் தேங்கும் இடங்களைச் சுத்தம் செய்வதனாலும் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தி நோயைத் தவிர்க்கலாம். டெங்கு நுளம்பு, அதிக தூரம் பயணிக்காது. ஆகையால் சமூகத்திலுள்ள ஒவ்வொருவரும் தமது வீட்டையும், அதன் சூழலையும் துப்புரவாக வைத்திருப்பதனால் டெங்கு நோய் பரவு வதைத் தவிர்க்கலாம்.

**26)டெங்கு வேகமாகப் பரவும் போது சமூகத்தில் அதனைக் கட்டுப்படுத்தும் உத்திகள் யாவை?**

நுளம்புபெருகும்இடங்களைஅழித்தலே டெங்கு நோய் கட்டுப்பாட்டில் முதன்மையானது. ஆனால் நோய் வேகமாக பரவும் போது இரசாயனப் பதார்த்தம் உடைய புகையூட்டல் மூலம் நுளம்புகள் கொல்லப்படும். இதனை 3-4 நாள்களுக்கு ஒரு தடவை மேற்கொள்ள வேண்டும்.

**27)டெங்கு நோய் பெருகுவதற்கான காரணிகள் யாவை?**

1.முறையான வகையில் நுளம்புகளின் பெருக்கம் கட்டுப்படுத்தாமை.

2.பொதுச் சுகாதாரச் சேவையின் வினைத்திறன் இன்மை.

3.விரைவாக உருவாக்கப்படும் தரக் குறைவான நகரமயமாக்கல்.

4.சூழலில் அதிகரிக்கும் உக்காத கழிவுகளின் பரம்பல் நுளம்புகளின் வாழிடமாக மாறல்.

5.அதிகரித்த பயணத் தொடர்புகள் நோயாளிகளையும், நுளம்புகளையும் இடத்துக்கிடம் கடத்துகின்றது.

**28)டெங்கு நோய் தொற்றை எவ்வாறு அறிவிக்கலாம்?**

டெங்கு நோய் எனச் சந்தேகிக்கப்படும் நோயாளியின் விவரத்தையும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிக்கு சிகிச்சை அளிக்கும் வைத்தியர் அறிவித்தல் அவசியம்.

**29)டெங்கு நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் வைத்தியர் யாது செய்கின்றார்?**

நோயாளியின் உடல்நிலையை கருத்தில் கொண்டு விடுதியில் அனுமதிக்க வேண்டும். குருதியில் வெண்குருதிச்சிறுதட்டுக்கள் 5000/mm3 குறைவடையும் போதும், குருதிச்சிறுதட்டுக்கள் 150000/mm3 யை விடக் குறைவடையும் போதும் விடுதியில் அனுமதித்துச் சிகிச்சை அளித்தல் வேண்டும்.

**30)டெங்கு நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் வைத்தியர்கள் தவிர்க்க வேண்டியவை யாது ?**

அஸ்பிரின், புருபன், வோல்டாரன் போன்ற மருந்துகளை தவிர்க்க வேண்டும்.

ஹிமட்டோகிரிட் அதிகரித்தாலன்றி நாளத்தினூடாக செலைன் போன்றவற்றை அளிக்கக்கூடாது.

ஹிமட்டோகிரிட் குறைவடைந்தாலன்றி குருதி மாற்றீடு அளித்தல் ஆகாது.

குருதிச் சிறுதட்டுக்களின் அளவு மிகக் குறைந்தாலன்றி குருதிச் சிறுதட்டு மாற்றீடு வழங்கல் ஆகாது.

**31)டெங்கு நோய் கட்டுப்பாட்டுக்கான சமூகப் பங்குதாரர்களுக்கான அழைப்பு யாது?**

“தொடங்கிவிடும் விழிப்பு அதனால்
இன்றே
சடமில்லை டெங்கு விடமென்றே
இடம் பல தேடித் தடம் இடவே
அடங்கிடுமே அவனியில் டெங்கு.”

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா




**வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல், ''யூடியூப் மற்றும் பேஸ்புக் இரண்டும் பல வருடங்கள் பழமைவாய்ந்த காட்சிகளை உயிரோட்டமாக வைத்திருக்க உதவுவதன் மூலமாகவும், மேலும் முக்கியபோக்கிற்கு வெளியேயுள்ள செய்தி ஆதாரங்களில் ஆர்வம் காட்டும் பார்வையாளர்களுக்கு RT இன் வீடியோக்களை பரிந்துரைத்தும் RT க்கு ஊக்கமளித்துள்ளது'' என் பதாகக் குற்றஞ்சாட்டுகிறது.**

இந்தப் பத்திரிகையின் கட்டுரை, வெவ்வேறு ஆய்வாளர்களின் பொழிப்புரை கூறுவது போல் தொழில்நுட்ப நிறுவனங்கள், ''அதன் உள்ளடக்கத்தை ரஷ்ய பிரசாரமாக முத்திரை குத்த வேண்டும்'' என்பது போன்ற மேற்கோள்களுடன் முடிவடைகிறது, மேலும், ''RT கதைகளை உள்ளடக்கி கூகுள் செய்திகளும், இந்தத் தளத்தை வாசகர்களுடன் சட்டபூர்வமானதாக்க உதவுகிறது'' என்றும் இது குற்றம் சாட்டுகிறது.

அரசாங்க ஸ்தாபக பத்திரிகைகளால் வழமையாக புறக்கணிக்கப்படும் நிகழ்வுகளை அறிக்கை செய்வதில் வளர்ச்சியடைந்துள்ளதால் RT பிரபலமாகியுள்ளது என்பது இந்த இரு கட்டுரைகளிலும் தவிர்க்கப்பட்டுள்ளது உண்மைதான்.

கிரெம்லின் பொதுவாக அதன் பார்வையை ஊக்குவிக்க ஆர்வமாக இருக்கும் விடயங்களைத் தேடுகிறது, அதாவது, சிரியாவில் அமெரிக்கத் தலையீடு, உக்ரேனிய உள்நாட்டுப் போர். போன்ற தலைப்புகள் பெரும்பாலும் RT வீடியோக்களை சிறந்த முடிவுகளில் ஒன்றாக மாற்றி விடும் என்று டைம்ஸ் கட்டுரை குற்றம் சாட்டுகிறது. நிச்சயமாக, RT வீடியோக்கள் உட்பட, எதிர்க்கும் கோணத்திலான கருத்துக்களை இணையத் தளத்தில் தேடுவதற்கு முன்னணி பார்வையாளர்கள் அமெரிக்க பிரதான ஊடகங்களைச் சார்ந்திருப்பது மிக வெளிப்படையானது என்ற வகையில் இது வெளியுறவு கொள்கையின் முக்கிய விடயங்களைச் சார்ந்துள்ளது.

கடந்த மாதம் யூடியூப், நிலையான நெறிமுறை மேம்படுத்தல் என அழைக்கப்படுவதன் ஒரு கூறாக, தனது விருப்பமான சனல்களின் பட்டியலில் இருந்து RT ஐ விலக்கி அதற்கு எதிரான முதல் வெளிப்படையான நடவடிக்கையை எடுத்துள்ளது.

RT இன் தலைமை துணை ஆசிரியர் கிரில் கர்னோவிச்-வலுவா, இந்த நடவடிக்கை அமெரிக்க சந்தையிலிருந்து ஒட்டுமொத்தமாக எங்களது சேனலை வெளியேற்றுவதற்கு எந்தவொரு வகையிலாவது சாத்தியமாக்கும் ஒருங்கிணைந்த முயற்சியில், அனைத்து RT பங்குதாரர்களுக்கும் உறவுகளுக்கும் அதிகரித்தளவில் பொருந்தக்கூடிய முன்னென்றுமிருந்திராத அரசியல் அழுத்தத்தை குறித்து பேசுகிறது என்று டைம்ஸ் பத்திரிகைக்கு தெரிவித்தார்.

**வோல் ஸ்ட்ரீட் ஜேர்னலுக்கு விடுத்த தனி அறிக்கை ஒன்றில், RT குறிப்பிட்டதாவது, தகவல் பற்றியதில் ஏகபோகத்தை இழப்பதாய் ஸ்தாபனத்தின் அச்சத்திற்கு நடைமுறையில் அனைத்து செய்தி அமைப்புக்களாலும் பேசப்பட்ட அதன் ஏதோ ஒரு உள்ளடக்கத்தை RT இன் சமூக ஊடகம் விளம்பரம் செய்தல்போல அத்தகைய மனக் கிளர்ச்சியற்ற நடவடிக்கைகளைச் சுற்றி ஒரு வெறி நிலவுகிறது, மற்றும் அமெரிக்க சந்தையிலிருந்து RTஐ வெளியேற்றும் ஒருங்கிணைந்த முயற்சியையும் காட்டிக்கொடுக்கிறது**

கடந்த மாதம், அமெரிக்காவுடன் ஒரு வெளிநாட்டு முகவராக இணைந்து கொண்ட RT இன் பதிவை அமெரிக்க நீதித்துறை கோரியமையானது, அந்த சனலுடன் பணியாற்றும் சுயாதீனமான பத்திரிகையாளர்கள் சிலரை, அவர்களும் வெளிநாட்டு முகவர்களாக பதிவு செய்ய நிர்ப்பந்திக்கப்படுவார்களோ என்ற அச்சத்திற்கு இட்டுச் சென்றது.

RT க்கு எதிரான கோரிக்கைகளின் அபத்தத்தை அடிக்கோடிட்டுக் காட்டும் ஓர் அறிக்கையில்இ வோல் ஸ்ட்ரீட் பத்திரிகை, இங்கிலாந்தின் BBC அல்லது அமெரிக்காவின் Radio Free Europe போன்ற, ஏனைய அரசாங்க நிதியளிப்பு பெறும் செய்தி ஊடக நிறுவனங்கள் போலல்லாமல், RT, மேற்கத்திய நிறுவனங்கள் மற்றும் ஜனநாயகங்களை கீழறுப்பதற்கான ஓர் இலக்குடன் மிக வெளிப்படையாக அரசியல் சார்ந்துள்ளது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர் என குறிப்பிடுகிறது. சோவியத் பிளாக்கை இலக்காகக் கொண்ட கம்யூனிச எதிர்ப்பு பிரசாரத்தின் ஆதாரமாக நிறுவப்பட்ட Radio Free Europe ஐ காட்டிலும் RT எப்படி மிக வெளிப்படையாக அரசியல் சார்ந்ததாகும் என்று ஒருபோதும் விளக்கப்படவில்லை.


வார்னரோ அல்லது டைம்ஸோ அல்லது எந்தவொரு பத்திரிகையோ, RT வெளியிட்ட எந்தவோர் அறிக்கையும் மறுப்பிற்கு இடமின்றி தவறானது என்பதைக் காட்ட எந்த முயற்சியும் செய்யவில்லை. மாறாக, ரஷ்ய அரசாங்கத்துடனான அதன் இணைப்பின் காரணமாக அந்தச் செய்தி வெளியீட்டு நிறுவனத்தை சட்டவிரோதமானது என்று அவர்கள் முத்திரை குத்தவே முனைகின்றனர்.

இருப்பினும், அவர்களது உண்மையான இலக்கு ரஷ்யா அல்ல, உள்நாட்டில் தான் அரசியல் எதிர்ப்பு உள்ளது. இந்தக் காட்சிகளுக்குப் பின்னால், இடதுசாரி, போர் எதிர்ப்பு மற்றும் முற்போக்கு வலைத் தளங்களுக்கான தேடல் நெரிசலில் 55 சதவிகிதத்தை வீழ்த்தும் வகையில் கூகுள், அதிகாரபூர்வ உள்ளடக்கத்தை மேற்பார்வையிடுவதாக அதன் நெறிமுறைகளில் ஏற்கனவே மாற்றங்களை செயற்படுத்தியுள்ளது.



**கிரீஸிலும் ஐரோப்பா முழுவதிலும் பெருந்திரளான தொழிலாளர்களால் ட்ரம்ப் நிர்வாகம் வெறுக்கப்படுகின்ற நிலைமைகளின் கீழ், கிரேக்க பிரதம மந்திரியோ அமெரிக்க-கிரேக்க உறவுகள் இரண்டாம் உலகப் போர் முடிந்ததற்குப் பின்னரில் இருந்து, ''அவற்றின் சிறந்த நிலையில்'' இருப்பதாக அறிவித்தார்**

கிரீஸ் பிரதம மந்திரியும் ''தீவிர இடது கூட்டணி'' (சிரிசா) தலைவருமான அலெக்சிஸ் சிப்ராஸ் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உடனான சந்திப்பு விஜயத்தின் போது, வொஷிங்டனில் ஓர் இழிவான நிகழ்வு அரங்கேறியது. ஒரு கூட்டு பத்திரிகையாளர் சந்திப்பில் அமெரிக்க வலதுசாரி ஜனாதிபதியின் முன் சரணாகதி அடைந்த, ஐரோப்பாவின் அந்த நடுத்தர வர்க்க ''இடதின்'' தலைமை பிரதிநிதி, வோல் ஸ்ட்ரீட் மற்றும் பென்டகனுக்கு கிரீஸ் பாதுகாப்பானது என்று பெருமை பீற்றினார்.



கிரீஸிலும் ஐரோப்பா முழுவதிலும் பெருந்திரளான தொழிலாளர்களால் ட்ரம்ப் நிர்வாகம் வெறுக்கப்படுகின்ற நிலைமைகளின் கீழ், கிரேக்க பிரதம மந்திரியோ அமெரிக்க-கிரேக்க உறவுகள் இரண்டாம் உலகப் போர் முடிந்ததற்குப் பின்னரில் இருந்து, ''அவற்றின் சிறந்த நிலையில்'' இருப்பதாக அறிவித்தார்.

அண்மித்து மூன்றாண்டுகளாக அவரது அரசாங்கம், தொழிலாள வர்க்கத்தின் மீது ஐரோப்பிய ஒன்றியத்தின் படுமோசமான சிக்கன நடவடிக்கைகளை திணித்திருப்பதால், அங்கே கிரீஸில் நிறைய இலாபமீட்டலாமென சிப்ராஸ் தெளிவுபடுத்தினார். சிரிசா அரசாங்கத்தின் ''தொடர் சீர்திருத்த நடவடிக்கைகளை'' ட்ரம்ப் பாராட்டிய போதும் மற்றும் அமெரிக்க தயாரிப்பான F-16 ரக போர்விமானங்களை மேம்படுத்துவது மீது அது 2.4 பில்லியன் டொலர் செலவிடும் என்று அறிவித்த போதும் புன்னகைத்திருந்த சிப்ராஸ், அவர் ட்ரம்புடன் சேர்ந்து பகிர்ந்து கொள்ளும் ''பொதுவான ஜனநாயக கோட்பாடுகளை'' புகழ்ந்துரைத்தார். கிரேக்க அதிகாரிகள் ''அமெரிக்க முதலீடுகளை ஈர்க்க எதிர்நோக்கி இருக்கின்றனர் என'' அவர் தெரிவித்தார்.

சிப்ராஸ் அமெரிக்க போர் எந்திரத்திற்கும் குழப்பத்திற்கிடமற்ற ஒரு முறையீடு செய்தார். ஏதென்ஸும் வொஷிங்டனும் சூடாவளைகுடாவின் கீறேற் கிரேக்க தீவில் அமைந்துள்ள அமெரிக்க கடற்படைத்தளத்தை மேம்படுத்தவும், சிரியா மற்றும் ஈராக் போல பல்வேறு முக்கிய போர் அரங்கங்களில் அமெரிக்க படைகளை நிலைநிறுத்துவதற்காக, அத்தீவின் மற்றோர் இடத்தில் புதிய அமெரிக்க இராணுவத் தளத்தைத் திறக்கவும் திட்டமிட்டுள்ளன என்ற உண்மையை சிப்ராஸூம் ட்ரம்பும் சூசகமாக குறிப்பிட்டனர். பாதுகாப்பு மற்றும் இராணுவத்துறைகளில் நிலவும் அடிப்படை தேசிய அக்கறைகள்'' மீது கிரீஸிற்கு வொஷிங்டன் உதவுகிறது என்று கூறிய சிப்ராஸ், சைப்ரஸ் விவகாரத்தில் கிரேக்க-துருக்கிய மோதல்களைத் தீர்க்க உதவுமாறு ட்ரம்பைக் கேட்டுக் கொண்டார்.

சிப்ராஸ் மத்திய கிழக்கு மற்றும் பால்கன் தொடர்பான அமெரிக்க கொள்கையைப் புகழ்ந்துரைத்தார், அங்கெல்லாம் அமெரிக்க போர்கள் மில்லியன் கணக்கானவர்களின் உயிர்களைப் பறித்துள்ளதுடன், பத்து மில்லியன் கணக்கானவர்களை அகதிகளாக்கி உள்ளது. அவர் கூறினார், அமெரிக்கா ''மத்திய கிழக்கும் பால்கனும் கூட்டுறவை ஊக்குவிக்கின்றன, அது அப்பகுதியின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கு பங்களிக்கிறது. கடந்த ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின்போது, ட்ரம்பின் வெற்றி வாய்ப்பை சிப்ராஸ் ''தீமையானது'' என்று குறிப்பிட்டதை நினைவூட்டிய ஒரு பத்திரிகையாளரை அவர் கண்டு கொள்ளவில்லை. சிப்ராஸ் தெரிவித்தார், அமெரிக்கா மிகவும் பலமானதொரு சக்தி, நன்மைக்காக தலையிடுவதற்கான அதன் வல்லமை, மிக மிக முக்கியமானது எங்களிடையே பொதுவான மதிப்புகள் உள்ளன, என்றார்.

(கேள்வி தொடரும்)

# முன்னேற்பாடின்மையே பெற்றோல் தட்டுப்பாடு!

## என்கிறது கூட்டு எதிர்க்கட்சி

கொழும்பு, நவ. 07

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பெற்றோல் தட்டுப்பாட்டுக்கு அரசின் முன் ஏற்பாடுகளற்ற செயற்பாடுகளே காரணம் எனக் கூட்டு எதிர்க்கட்சி சுட்டிக் காட்டியுள்ளது.

புஞ்சி பொரளையில் அமைந்துள்ள ஸ்ரீவஜிரா ராம பௌத்த நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது கருத்து வெளியிடுகையிலேயே கூட்டு எதிர்க்கட்சியின்நாடாளுமன்ற உறுப்பினர்பந்துலகுணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-



தற்போது நாட்டில் நிலவும்பெற்றோல்தட்டுப்பாடு காரணமாக மக்கள் சிரமப்படுகின்றமையைக் காணக்கூடியதாக உள்ளது. யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் கூட பெற்றோலுக்கு தட்டுப்பாடு இவ்வாறு ஏற்படவில்லை.

அவ்வாறு தட்டுப்பாடு ஏற்பட்டாலும் நாட்டின் பாதுகாப்பு கருதி குறிப்பிட்ட அளவிலான பெற்றோல் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கும். ஆனால், தற்போதைய ஆட்சியில் அவ்வாறான முன் ஏற்பாடு எதுவும் கிடையாது.

அதன் காரணமாகவே நாட்டில் பெரிய பெற்றோல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதியின் ஆட்சியில் யுத்தம் உட்பட பல்வேறுபட்ட பிரச்சினைகள் நாட்டில் நிலவிய போதும் நாம் மக்களது ஜீவனோபாயத்துடன் விளையாடவில்லை. மக்களது உணவு தேவையை நாம் சீராக நடைமுறைப் படுத்தினோம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விவசாயத்துறை அமைச்சராக இருந்த பொழுது வர்த்தக மற்றும் நுகர்வு விடயங்களில் அவர் எம்முடன் பகலிரவு பாராது பாடுபட்டமையை என்னால் மறக்க முடியாது.

எனினும், அத்தகைய ஒருவர் தற்போது ஏன் இந்த விடயங்களில் முறையான வேலைத் திட்டங்களை அமுல்படுத்துகின்றார் இல்லை என்பது தான் ஆச்சரியமாகவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

# மருந்து வகைகளின் விலைகள் குறைப்பு

## உலக சுகாதார ஸ்தாபனம் அறிவிப்பு



கொழும்பு, நவ. 07

இலங்கை அரசு 48 அத்தியாவசிய மருந்து வகைகளின் விலையைக் குறைத்தமை நோயாளர்களுக்கு கிடைத்த வெற்றியாகுமென்று உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்டுள்ள 2016 ஆண்டுக்கான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

48 வகையான மருந்து வகைகளின் விலை குறைக்கப்பட்டமை மற்றும் சீனிப் பாவனையை குறைப்பதற்காக வர்ண குறியீடுகள் அறிமுகப்படுத்தப்பட்டமை ஆகியவற்றுக்கும் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக ஏனைய நாடுகளும் மதிப்பீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் கேட்டுள்ளது.

அத்தியாவசிய மருந்து வகைகளின் விலைகள் குறைக்கப்பட்டமை தொற்றா நோயைக் கட்டுப்படுத்துவற்கான அடிப் படையாகும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.

நிலைபேறான அபிவிருத்தி இலக்கை வெற்றி கொள்வதற்காக இலங்கைக்கான பயணத்திற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படுமென்றும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# கூடிய சம்பளம் கொண்ட தொழிலாக ஆசிரியத்துவம் தரம் உயர்த்தப்படும்!

கொழும்பு, நவ. 07

ஆசிரியர் தொழிற்றுறையை ஆகக் கூடிய சம்பளத்தொகையைக் கொண்ட தொழிற் துறையாகத் தரம் உயர்த்துவதே தமது எதிர்பார்ப்பாகும் என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரிய வசம் தெரிவித்துள்ளார்.

மேல்மாகாண நுண்கலை கேந்திர நிலையத்தில் கொழும்பு ஆனந்தா மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-




புதிதாக 15ஆயிரம் ஆசிரியர்களை இணைத்துக் கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

நீண்டகால வேலைத் திட்டமாக கல்வியியற் கல்லூரிக்கு சேர்த்துக் கொள்ளப்படுவோரின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உலகில் உள்ள தொழிற்றுறைகளில் உன்னதமான தொழிற்றுறை ஆசிரியர் தொழிற்றுறையாகும்.

இந்தத்தொழிற்றுறையில் உள்ளோருக்கே ஏனைய தொழிற்றுறையினரை உருவாக்குவதற்கு உள்ள ஆற்றல் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(க)

# முல்லைத்தீவில் சுனாமி ஒத்திகை நிகழ்வு!

தேசிய சுனாமி எச்சரிக்கை ஒத்திகை செயற்றிட்டத்தின் கீழ் நாடளாவியரீதியில் 14 கடற்கரை மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள77 சுனாமி முன் எச்சரிக்கை கோபுரங்கள் ஒரே நேரத்தில் பரீட்சித்து பார்க்கும் நிகழ்வு நேற்று முன் தினம் இடம்பெற்றது.

இதன் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 5 சுனாமி முன் எச்சரிக்கைக் கோபுரங்கள் அமைந்துள்ள இடங்களான புதுமாத்தளன், வெள்ளாமுள்ளிவாய்க்கால், கொக்கிளாய், அளம்பில் மற்றும் முல்லைத்தீவு நகரம் ஆகிய கடற்கரை பிரதேச கிராம சேவையாளர் பிரிவுகளில் சுனாமி முன் எச்சரிக்கை ஒத்திகை நிகழ்வு இடம்பெற்றது.



முதலாவது எச்சரிக்கை பி.ப 2.12 மணியளவிலும், இரண்டாவது எச்சரிக்கை 2.20 மணியளவிலும் எச்சரிக்கை மீளப் பெறப்பட்ட செய்தி பி.ப. 3.35 மணியளவிலும் தெரிவிக்கப்பட்டது.

கரைதுறைபற்று பிரதேச செயலாளர் பிரிவு, அளம்பில் கிராம சேவையாளர் பிரிவில், அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன்தலைமையில் சுனாமி ஒத்திகை நிகழ்வு இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர், அனர்த்த முகாமைத்துவ உதவிபணிப்பாளர் மற்றும் ஊழியர்கள், இலங்கை செஞ்சிலுவை சங்க முல்லைத் தீவு கிளை, அனர்த்த பதிலிறுப்புப் பிரிவினர் முப்படையினர் பொலிஸார் ஆகியோர் கலந்துகொண்டனர்.



இதன்போது சுனாமி தொடர்பான உறுதிசெய்யப்பட்ட செய்தியைக் கேள்வியுற்ற பொது மக்கள் வெளியேறி அளம்பில் மகா வித்தியாலயத்தில் தஞ்சமடைந்தனர்.

இவர்களுக்கான முதலுதவி மற்றும் முகாமைத்துவ ஒழுங்கமைப்புக்களை அரச ஊழியர் கள் மற்றும் செஞ்சிலுவை சங்கத்தால் வழங்கப்பட்டது.

இறுதியாகப் பாதுகாப்பான இடத்திற்கு வருகைவந்த பொதுமக்களுடனான சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதில் மாவட்ட அரசாங்க அதிபர், கரைதுறைப்பற்று பிரதேசசெயலாளர் குணபாலன் ஆகியோரும் கருத்துக்களை தெரிவித்துள்ளார்கள்.

(க-81)

# தமிழக மழை சேதத்துக்கு ரூ.1,500 கோடி வேண்டும்



## பிரதமரிடம் எடப்பாடி வேண்டுகோள்

சென்னை, நவ.07

தமிழகத்தில் மழை நிவாரண மாகப் பிரதமரிடம் ஆயிரத்து 500 கோடி ரூபாய் கேட்டிருகின்றேன் என முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடியை வழிய னுப்பிய பிறகு முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி நிருபர்க ளுக்குப் பேட்டியளித்தார். அப் போது அவர் கூறியவை வரு மாறு:-

தமிழ்நாட்டில் பெய்து வரும் கன மழை விவரங்களைப் பிரத மரிடம் தெரிவித்தேன். சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், நாகை யின் மழை சேதத்தையும் விளக் கினேன். மழை சேதத்துக்கு தமிழ்நாட்டுக்கு மழை நிவாரண மாக ஆயிரத்து 500 கோடி ரூபாய் கேட்டுள்ளோம். மழையால் பாதிக் கப்பட்ட மாவட்டங்களுக்கு உரிய நிவாரணம் அளிப்பேன் எனப் பிரதமர் உறுதி அளித்திருக்கின் றார்.

தாழ்வான பகுதிகளில் தேங்கி யிருக்கும் மழைநீரை வெளி யேற்ற அரசு நடவடிக்கை எடுத் துள்ளது. எதிர்காலத்தில் தண் ணீர் தேங்காமல் இருக்கவும் நட வடிக்கை எடுக்கப்படும். நீர் நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்பு கள் அகற்றப்பட்டு வருகின்றன என்று தெரிவித்துள்ளார்.

மேலும் ,நீதிமன்றத்தின் தீர்ப்பு வந்த பிறகு உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படும். - என்றார்.

(ப)

# கருணாநிதியை சந்தித்தார் மோடி



சென்னையில் நேற்றுப் பல்வேறு நிகழ்ச்சி களில் பங்கேற்ற பிரதமர் மோடி தி.மு.க. தலைவர் கருணாநிதியை அவரது இல்லத்திற்கு சென்று சந்தித்து நலம் விசாரித்துள்ளார்.

தினத்தந்தி பவளவிழா மற்றும் ஐ.ஏ.எஸ்., அதிகாரியின் திருமண விழா எனப் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கவிருக்கிறார்.

கருணாநிதி வீட்டிற்குச் சென்ற மோடியை, தி.மு.க. செயல் தலைவர் ஸ்டாலின், கனிமொழி, முன்னாள் அமைச்சர் துரை முருகன் ஆகியோர் வரவேற்றனர்.

தொடர்ந்து அவர் கருணாநிதியை நேரில் சந்தித்து உடல் நலம் குறித்து விசாரித்தார். பிரதமர் மோடி தி.மு.க. தலைவரை சந்தித்தமை யில் அரசியல் ஏதுமில்லை என்று பா.ஜ.க. நிர்வாகிகள் தெரிவித்தனர்.

பிரதமருடனான சந்திப்புத் தொடர்பாக கனிமொழி எம்.பி. கூறும் போது, டில்லியில் உள்ள தனது வீட்டில் ஓய்வு எடுக்க தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு பிரதமர் மோடி அழைப்பு விடுத்தார் என்று தெரிவித்துள்ளார்.

# பீகாரில் நதியில் மூழ்கி 9 பேர் சாவு

பீகார், நவ.07

பீகாரில் கங்கை நதியில் தவறி விழுந்த சிறுவனை மீட்க நதியில் குதித்த 9 பேர் நீரில் மூழ்கிப் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

பீகார் மாநிலம் வைசாலி மாவட்டத்தில் உள்ள மாஸ் டனா காட் என்ற இடத்தில் உள்ள மலைப்பகுதிக்குச் சிறுவர்கள், பெண்கள் உட்பட சுற்றுலாப் பயணிகள் 11 பேர் வந்தனர். அப்போது எதிர்பாராதவிதமாக ஒரு சிறுவன் கால் இடறி நதியில் விழுந்தான்.

இதையடுத்து அவனைக் காப்பாற்றுவதற்காக அவனுடன் வந்திருந்த அனைவரும் நதியில் குதித்தனர். ஆனால் துரதிஷ்ட வசமாக அவர்களில் 9 பேர் நீரில் மூழ்கிப் பரிதாபமாக உயிரிழந்த னர்; 2 பேர் மாயமாகிவிட்டனர்.

(க)

# கேலிச்சித்திரம் வரைந்த கார்ட்டூனிஸ்ட் கைது




நெல்லையில் கந்துவட்டிக் கொடு மையால் 4 பேர் தீக்குளித்துத் தற் கொலை செய்து கொண்ட விவகாரம் தொடர்பாக அரசை விமர்சித்துக் கேலிச்சித்திரம் வரைந்த கேலிச்சித் திரக் கலைஞர் பாலா கைது செய்யப் பட்டுள்ளார்.

நெல்லை மாவட்டம் அச்சன்புதூர் அருகில் உள்ள காசி தர்மத்தை சேர்ந்த இசக்கிமுத்து கந்து வட்டிக் கொடுமை யால், அவருடைய மனைவிசுப்புலட்சுமி மற்றும் 2 மகள்களு டன் நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின்முன் தீக்குளித்துத் தற்



கொலை செய்த சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து கார்ட்டூனிஸ்ட் பாலா என்பவர் அரசை விமர்சித்துக் கேலிச்சித்திரம் வரைந்தார். தரையில் தீப்பிடித்து எரிந்த நிலையில் படுத்து கிடக்கும் குழந்தையை தமிழக முதலமைச்சர், நெல்லை மாவட்ட ஆட்சியர், பொலிஸ் ஆணையாளர் ஆகியோர் ஆடையில்லாமல், கையில் நோட்டுக் கட்டை வைத்துக்கொண்டு நின்று வேடிக்கை பார்க்கின்றமை போலவும் கேலிச்சித்திரம் வரையப் பட்டு இருந்தது.

இந்தக் கேலிச்சித்திரம் சமூக வலைத் தளங்களில் வைரலாகப் பரவியது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் கேலிச்சித்திரம் வரைந்த கார்ட்டூனிஸ்ட் பாலாவை பொலிஸார் கைது செய் துள்ளனர்.

கார்ட்டூனிஸ்ட் பாலா கைது செய்யப் பட்டதற்கு பல்வேறு தரப்பில் இருந்தும் எதிர்ப்புக்கள் எழுந்து வருகின்றன.

# ஜெயலலிதாவால் நீக்கப்பட்டவர்களுக்கு அ.தி.மு.க.வில் மீண்டும் பொறுப்பு

## தினகரன் அறிவிப்பு

ஜெயலலிதாவால் கட்சி விரோ தச் செயல்களில் ஈடுபட்டனர் என நீக்கப்பட்டவர்களுக்குத் தினகரன் பொறுப்புகளை வழங் கியுள்ளார்.

அ.தி.மு.க. அம்மா அணியின் துணைப் பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் கட்சி நிர் வாகிகளை நீக்கி விட்டு புதிய வர்களை நியமனம் செய்து வருகின்றார்.

அ.தி.மு.க. அம்மா அணியின் தகவல் தொழில்நுட்பப் பிரிவுச் செயலாளர் பொறுப்பில் இருந்து ராஜ்சத்யன் நீக்கப்பட்டுள்ளார்.

அதற்குப் பதிலாகத் தகவல் தொழில்நுட்ப பிரிவின் மாநில தலைவராக ஆர்.பாலு, செயலாளராக ஆர்.ராஜ்மோகன், இணை செயலாளராக கேசவன் ஆகியோரை நியமித்து தினகரன் உத்தரவிட்டுள்ளார்.

இதில் பாலு, ராஜ்மோகன் ஆகியோர் மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவால் கட்சியில் இருந்து நீக்கப்பட்டவர்கள் ஆவார்கள்.

18 வயது முதல் 30 வயது வரை உள்ள வாக்காளர்கள் 40 வீதம் பேர் உள்ளனர். அவர்கள் சமூக வலைத்தளங்களில் இருப்ப வர்கள், இதனால் தகவல் தொழில் நுட்பப் பிரிவுக்கு அனு பவம் வாய்ந்தவர்கள் தேவை என்பதைக் கருத்தில்கொண்டு அந்த இருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர் என டி.டி.வி.தினகரன் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ப)

# கேக்கிற்குப் பதில் கால்வாய்



## நடிகர் கமல் தெரிவிப்பு

நான் அரசியலுக்கு வருவது உறுதி என்று ரசி கர்கள் மத்தியில் நடிகர் கமலஹாசன்பேசியுள்ளார்.

பிரபல திரைப்பட நடி கரான கமலஹாசன் சமீப காலமாக தமிழக அரசு மற்றும் மத்திய அரசு மீது பல்வேறு விமர்சனங்க ளைக் கூறி வருகிறார். அது மட்டுமின்றி விரைவில் நான் அரசியலுக்கு வரு வேன் என்றும் தெரிவித் திருந்தார்.

இந்த நிலையில் நடிகர் கமலஹாசன் தனது நற் பணி இயக்கத்தினரைச் சென்னையில் சந்தித்தார்.

அப்போது பேசிய அவர், இன்று 7 ஆம் திகதி தன்னுடைய பிறந்த நாள் அன்று ரசிகர்கள் கேக் வெட்டவேண்டாம், அதற் குப் பதிலாக கால்வாய் வெட்ட வேண்டிய நேரம் தான் இது என்று கூறியுள்ளார்.

தொடர்ந்து பேசிய அவர், நான் கட்சி ஆரம் பித்து அரசியலுக்கு வரு கின்றமை உறுதி. கட்சி ஆரம்பிக்க பணம் தேவை யில்லை. அப்படிப் பணம் தேவைப்பட்டால் ரசிகர் கள் பணம் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள்.

மேலும் நான் சுவிஸ் வங்கியில் இருக்கும் பணத்தை மீட்க முயற்சிப் பேனே தவிர, அந்த வங்கியில் பணத்தைப் போடமாட்டேன். துவக்க கூட்டம் தான் இது, இதே போன்று 50 கூட்டங்களை நடத்த வேண்டும் என கூறினார்.

ரசிகர்கள் வழங்கும் பணத்திற்கு கணக்கு வைக்கசெயலி பயன்படுத் தப்படும் என்று கமல் தெரிவித்தமை குறிப் பிடத்தக்கது.

# கட்டலோனியா முன்னாள் தலைவர் பூட்ஜியமோண்ட் சரண்

பிரெஸ்ஸல்ஸ்,நவ.07

கட்டலோனியாத் தலைவர் கார்லஸ் பூட்ஜியமோண்ட் மற்றும் அவரது ஆதரவாளர்களைக் கைது செய்ய உத்தரவு பிறப்பித்துள்ள நிலையில், நேற்று அவர்கள் பெல்ஜியம் பொலிஸில் சரணடைந்துள்ளனர்.

ஸ்பெயின் நாட்டுப் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் மாகாணம் கட்டலோனியா. இங்கு தனிநாடாகப் பிரிவது தொடர்பான வாக்கெடுப்பு கடந்த மாதம் முதலாம் திகதி நடந்தது. இதில் கட்டலோனியா தனிநாடாகப் பிரிந்து செல்வதற்கு 90 வீத மக்கள் ஆதரவு தெரிவித்தனர். இதையடுத்து, கடந்த மாதம் 27ஆம் திகதி ஸ்பெயினிடம் இருந்து விடுதலை பெற்று விட்டது என கட்டலோனியா நாடாளுமன்றம் அறிவித்தது.

கட்டலோனியா சுதந்திரப் பிரகடனம் செய்த சில மணி நேரங்களில் நாடாளுமன்றத்தைக் கலைத்து, நேரடி நிர்வாகம் அமுல்படுத்தப்படுகின்றது என ஸ்பெயின் அரசு அறிவித்தது. இதற்கிடையே, பிரிவினைவாத நடவடிக்கையில் ஈடுபட்டனர் எனக் கூறி கட்டலோனியாத் தலைவர் கார்லஸ் பூட்ஜியமோண்ட் உள்ளிட்ட 5 பேர் மீது ஸ்பெயின் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. விசாரணைக்கு ஆஜராகாத பூட்ஜியமோண்ட் உட்பட 5 பேருக்கு பிடியாணை பிறப்பித்து நீதிமன்றம்



உத்தரவிட்டது.

இந்நிலையில் கட்டலோனியாவில் ஆட்சியில் இருந்து நீக்கப்பட்ட கார்லஸ் பூட்ஜியமோண்ட் மற்றும் அவருடைய ஆலோசகர்கள் 4 பேர் என மொத்தம் 5 பேர் பெல்ஜியம் பொலிஸில் சரணடைந்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்களது சட்டத்தரணிகள் கூறுகையில், சரணடைந்த அவர்களை நீதிபதி முன்பு ஆஜர்படுத்தவுள்ளோம். விசாரணைக்குப் பிறகே நீதிபதி அவர்களைச் சிறையில் அடைக்கின்றமை அல்லது விடுவிக்கப்படுகின்றமை தொடர்பாக உத்தரவிடுவார் என்றனர்.

## செஞ்சிலுவை சங்கத்தில் ஊழல்



மேற்கு ஆபிரிக்க நாட்டைச் சுழன்று தாக்கிய எபோலக் காய்ச்சலுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொண்ட செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் சுமார் 6 லட்சம் டொலர் வரை ஊழலில் ஈடுபட்டுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

மேற்கு ஆபிரிக்க நாடுகளான லைபீரியா, சியர்ரா லியோன், கினியா மற்றும் நைஜீரியாவில் கடந்த 2014 மற்றும் 2016 ஆண்டுகளில் எபோலா வைரஸ் தாக்கியதில் 11ஆயிரத்து 300 பேர் பலியாகினர். சுமார் 29 ஆயிரம் பேர் இந்த நோயால் பாதிக்கப்பட்டனர். இதில் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்ட செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் சுமார் 60 லட்சம் டொலர்கள் வரை ஊழலில் ஈடுபட்டுள்ளமையை அந்த அமைப்பு ஒப்புக் கொண்டுள்ளது.

சுவிஸ்லாந்தின் ஜெனிவாப் பகுதியைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் இந்த அமைப்பு தற்போது இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

சியர்ரா லியோனில் மட்டும் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் மற்றும் வங்கி அதிகாரிகள் இணைந்து சுமார் 21 லட்சம் டொலர் வரை ஊழலில் ஈடுபட்டுள்ளது.

ஊழல் விவகாரத்தில் உரிய நடவடிக்கை மிக விரைவில் மேற்கொள்ள உள்ளோம் எனச் செஞ்சிலுவைச் சங்கம் உறுதி அளித்துள்ளது.

# அமெ. டெக்சாஸ் தேவாலயத்தில் மர்ம நபர் சூடு; 27 பேர் சாவு!




வொஷிங்டன்,நவ.07

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள பெப்டிஸ்ட் தேவாலயத்தில் மர்ம நபர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 27 பேர் பலியாகினர். மேலும் 30இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள சதர்லேண்ட் ஸ்பிரிங்ஸ் பகுதியில் அமைந்துள்ள பெப்டிஸ்ட் தேவாலயத்தில் நேற்றுமுன்தினம் காலை ஏராளமானோர் கூடியிருந்தனர்.

அப்போது அங்கு வந்த மர்ம நபர் ஒருவர், துப்பாக்கியால் அங்கிருந்தவர்களை நோக்கிச் சரமாரியாகச் சுடத் தொடங்கினார். இதனால் தேவாலயத்தில் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த மக்கள் அலறியடித்துக் கொண்டு ஓடினர். இந்தக் கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் 27 பேர் பலியாகினர். மேலும், 30இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

தகவலறிந்து பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர். அவர்கள் பலியானவர்களின் உடல்களைக் கைப்பற்றிப் பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

படுகாயம் அடைந்து உயிருக்குப் போராடிய பலரை ஹெலிக்கொப்டர் உதவியுடன் மீட்டு அருகிலுள்ள மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளித்து வருகின்றனர். துப்பாக்கிச் சூடு நடத்திய ஆசாமி சுட்டுக் கொல்லப்பட்டான் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து சதர்லேண்ட் ஸ்பிரிங்ஸ் பகுதியில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

## ஹெலி விபத்தில் சவுதி இளவரசர் உயிரிழப்பு

ஏமன் நாட்டு எல்லை அருகில் நடைபெற்ற ஹெலிக்கொப்டர் விபத்தில் சிக்கி சவுதி அரேபியா இளவரசர் மன்சூர் பின் மாக்ரோன் உயிரிழந்தார் என அந்நாட்டு ஊடகம் தகவல் தெரிவித்துள்ளது.

சவுதி அரேபியா இளவரசர்களுள் ஒருவரும், ஆசிர் மாகாணத் துணை ஆளுநராகவும் பதவி வகித்தவர் மன்சூர் பின் மாக்ரோன். நேற்று முன்தினம் அதிகாரிகள் சிலருடன் ஹெலிக்கொப்டரில் சென்று கொண்டிருந்தார். ஏமன் நாட்டு எல்லை அருகில் பறந்து கொண்டிருந்தபோது திடீரென ஹெலிக்கொப்டர் விழுந்து நொருங்கியது.

இந்த விபத்தில் சவுதி இளவரசர் மன்சூர் பின் உயிரிழந்தார் என அந்நாட்டு செய்தி ஊடகங்கள் தெரிவிக்கின்றன.


# ட்ரம்புக்கு வடகொரியா கடும் எச்சரிக்கை

ட்ரம்பின் கடுமையான கருத்துக்கள் அமெரிக்காவுக்குப் பேரழிவைக் கொண்டு வரும் என வடகொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

வட கொரியாவின் அணு ஆயுதத் திட்டங்களை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்பதில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உறுதியாக உள்ளார். இது தொடர்பாக அவருக்கும், வடகொரியாவின் தலைவர் கிம் ஜாங் உன்னுக்கும் இடையே தொடர் வார்த்தை யுத்தங்கள் நடந்து வந்தன.

இந்நிலையில், வடகொரியாவின் அணு ஆயுதத் திட்டங்களுக்கு எதிராக ஆசிய நாடுகளை ஒன்று திரட்டும் நோக்கத்துடன் ட்ரம்ப் சுற்றுப்பயணம் ஆரம்பித்துள்ளார்.

முதல் கட்டமாக ஜப்பான் சென்றுள்ள அவர், சென்ற உடனேயே வடகொரியாவை மறைமுகமாகச் சாடினார். அப்போது அவர், எந்தச் சர்வாதிகாரியும், அமெரிக்காவைக் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது என்று



சாடினார்.

ட்ரம்ப், இன்று தென்கொரியா செல்லும் நிலையில், ஜப்பானில் இப்படிக் கருத்து வெளியிட்டிருந்த ட்ரம்புக்கு வட கொரியா பதிலடி கொடுத்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க நாடாளுமன்ற வெளியுறவுக்குழுத் தலைவர் பொப் காக்கர் மற்றும் முன்னாள் அதிகாரிகள், அர்த்தமே இல்லாமல் ட்ரம்ப் வடகொரியாவுக்கு அழுத்தங்களை ஏற்படுத்தி வருகிறார் என்று கூறியிருந்தனர். இதனை மேற்கோள் காட்டி, வடகொரியாவின் ஆளுங்கட்சி நாளேடான 'ரோடாங்சின்முன்' செய்தி வெளியிட்டுள்ளது.

அதில், அமெரிக்க ஜனாதிபதி முட்டாள்தனமாகக் கருத்துக்களைத் தெரிவிப்பதன் மூலமாக வடகொரியாவைத் தீவிரமாகத் தூண்டி விடுகின்றார். வடகொரியாவின் விருப்பம் மற்றும் துணிச்சலான நடவடிக்கைகளை அமெரிக்கா தவறாக மதிப்பிட்டது என்றால், வடகொரியா அனைத்து சக்திகளையும் ஒன்று திரட்டி ஓர் உறுதியான மற்றும் இரக்கமற்ற தண்டனையை விதிக்க நேரிடும். அதைச் சமாளிக்க வேண்டிய நிலைக்கு அமெரிக்கா நிர்ப்பந்திக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

மேலும், ட்ரம்பின் கடுமையான கருத்துக்கள், அமெரிக்காவின் நிலப்பகுதிக்கு அணுசக்தி பேரழிவைக் கொண்டு வரக் கூடும் என்றும் கூறப்பட்டுள்ளது.

# இலங்கை டெஸ்ட் அணி தெரிவு; இந்தியாவை வீழ்த்துமா?





இந்திய அணிக்கு எதிராக நவம்பர் மாதம் 16 ஆம் திகதி கொல்கத்தாவில் ஆரம்பமாகவிருக்கும் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவிருக்கும் 15 வீரர்கள் அடங்கிய இலங்கைக் குழாமை இலங்கைக் கிரிக்கெட் சபை (SLC) வெளியிட்டுள்ளது.

இந்தத் தொடருக்கான இலங்கை அணியில் வலதுகைத் துடுப்பாட்ட வீரரான தனஞ்சய டி சில்வா மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக அண்மையில்திறமையான ஆட்டத்தை வெளிப்படுத்திய தசுன் சானக்க ஆகியோர் மீள அழைக்கப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய கௌஷால் சில்வா, குசல் மெண்டிஸ் மற்றும் நுவான் பிரதீப் ஆகியோர் இந்திய அணிக்கு எதிரான இத்தொடரில் உள்ளடக்கப்படவில்லை.

இலங்கை அணி இறுதியாக தினேஷ் சந்திமால் தலைமையில் பாகிஸ்தான் அணியை அவர்களது இரண்டாம் தாயகமான ஐக்கிய அரபு இராச்சியத்தில் முதற் தடவையாக டெஸ்ட் தொடரொன்றில் 2:0 என வீழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணிக்காக கடந்த காலங்களில் சிறப்பான ஆட்டத்தை வெளிக்காட்டிய நிலையில் காயமுற்றிருந்த அசேல குணரத்ன மற்றும் குசல் ஜனித் பெரேரா ஆகியோர் தற்போது பூரண உடற் தகுதியைப் பெற்றிருக்கின்ற போதிலும், டெஸ்ட் போட்டிகளில் போதிய பயிற்சிகளை அண்மைய நாள்களில் பெறாத காரணத்தினால் அவர்களுக்கு இக்குழாமில் வாய்ப்பு வழங்கப்படவில்லை.

பாகிஸ்தான் அணிக்கு எதிரான தொடரில் விளையாடாது போயிருந்த இலங்கை அணியின் முன்னாள் அணித் தலைவரான அஞ்சலோ மத்தியூஸ் தனது காயத்தில் இருந்து முழுமையாக மீண்டிருக்கின்றமையால் இந்தியாவுக்கான இந்த டெஸ்ட் தொடரில் இலங்கையின் மத்தியவரிசையைப் பலப்படுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்தோடு தற்போது கௌஷால் சில்வா அணியில் நீக்கப்பட்டிருப்பதால் இலங்கை அணி யின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக சதீர சமரவிக்ரம செயற்படுவார் என நம்பப்படுகிறது.

இலங்கை அணி, இந்த டெஸ்ட் தொடருக்கு முன்பாக முதல் டெஸ்ட் போட்டி நடைபெற ஏற்பாடாகியிருக்கும் கொல்கத்தாவில் மூன்று நாள்கள் கொண்ட பயிற்சிப் போட்டி ஒன்றில் இந்தியக் கிரிக்கெட் சபை பதினொருவர் அணியுடன் விளையாடவுள்ளது. இதனையடுத்து இரண்டாம், மூன்றாம் டெஸ்ட் போட்டிகளுக்காக இலங்கை நாக்பூர் மற்றும் டில்லி ஆகிய நகரங்களுக்குப் பயணிக்கவுள்ளது.



முதலாவது டெஸ்ட் ஆட்டம் நடைபெறவிருக்கும் உலகின் இரண்டாவது பெரிய கிரிக்கெட் மைதானமான கொல்கத்தாவிலேயே 1996 ஆம் ஆண்டு உலகக்கிண்ண அரையிறுதிப் போட்டியில் இலங்கை அணி இந்தியாவை வீழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் குழாமில் உள்ளடக்கப்பட்டும் அத் தொடருக்கான போட்டிகளில் விளையாடும் வாய்ப்பைப் பெறாத மத்திய வரிசை வீரரான ரோஷென் சில்வா மற்றும் விஷ்வ பெர்னாந்து ஆகியோர் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் தத்தமது இடங்களில் நீடிக்கின்றனர்.

இந்தத் தொடருக்கான இலங்கை அணி நாளை இந்தியாவுக்குப் பயணிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## லா லிகா தொடர்

### செவில்லாவை வீழ்த்தியது பார்சிலோனா; 600ஆவது ஆட்டத்தில் மெஸ்ஸி ஏமாற்றம்



லா லிகா உதைபந்து லீக் தொடரில் செவில்லாவுக்கு எதிரான ஆட்டத்தில் பகோ அல்காசரின் சிறப்பான ஆட்டத்தால் பார்சிலோனா 2:1 என வெற்றி பெற்றது.

லா லிகா உதைபந்து லீக் தொடரின் ஆட்டம் ஒன்றில் பார்சிலோனா - செவில்லா அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இந்த ஆட்டம் பார்சிலோனாவிற்குச் சொந்தமான மைதானத்தில் நடைபெற்றது. இது மெஸ்ஸி பார்சிலோனாவிற்காக விளையாடிய 600 ஆவது ஆட்டமாகும்.

600ஆவது போட்டியில் மெஸ்ஸி கோல் அடிப்பார் என்று ரசிகர்கள் எதிர்பார்த்தனர். அதற்கேற்றபடி மெஸ்ஸியும் பலமுறை பந்தை கோல் எல்லையை நோக்கிக் கடத்திச் சென்றார். ஆனால் மெஸ்ஸியால் கோல் அடிக்க முடியவில்லை.

ஆட்டத்தின் 23ஆவது நிமிடத்தில் பார்சிலோனா அணியின் பகோ அல்காசர் முதல் கோலைப் பதிவு செய்தார். இதனால் முதல் பாதி நேரத்தில் பார்சிலோனா 1:0 என முன்னிலை பெற்றது.

2ஆவது பாதி நேர ஆட்டத்தின் 59 ஆவது நிமிடத்தில் செவில்லா அணியின் குய்டோ பிசாரோ தலையால் முட்டி கோல் அடித்தார். அடுத்த 6ஆவது நிமிடத்தில் பகோ அல்காசர் மீண்டும் ஒரு கோல் அடிக்கப் பார்சிலோனா 2:1 என முன்னிலை பெற்றது.

அதன்பின் இரு அணி வீரர்களால் கோல் அடிக்க முடியவில்லை. இறுதியில் பார்சிலோனா 2:1 என வெற்றி பெற்றது.


(ப)

## மெய் வல்லுநர்களுக்கு விசேட கொடுப்பனவு

தேசிய பயிற்றுவிப்பு அமைப்பில் தகுதி பெறும் அனைத்து மெய்வல்லுநர் வீர, வீராங்கனைகளுக்கு விசேட மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

தற்போது விளையாட்டுத்துறையில் ஈடுபட்டுள்ள மெய்வல்லுநர்களுக்குக் கடந்த தேசிய மற்றும் சர்வதேச மெய்வன்மைப் போட்டிகளில் வெளிப்படுத்தியுள்ள ஆற்றலுக்கு அமைவாக வகைப்படுத்தி, இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுமென்று விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

ஒலிம்பிக் தரம் மற்றும் ஆசிய விளையாட்டுத் தரம் மற்றும் தேசிய ரீதியில் சாதனை நிலைநாட்டியுள்ள சிரேஷ்ட வீர வீராங்கனைகள் இந்த வகைப் படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.



# சோதனைகளைத் தாண்டி சாதனைகள் படைத்து வரும் துணுக்காய் கோட்டைக்கட்டியகுள அ.த.க. பாடசாலை

## தேசிய மட்டத்தில் எறிபந்து அணி வெள்ளிப்பதக்கம்



ஒழுங்கான மைதானம் கூட இல்லாமல் தேசிய மட்டத்தில் துணுக்காய் வலயப் பாடசாலையான கோட்டைக் கட்டியகுள அ.த.க பாடசாலை எறிபந்து ப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுள்ளது.

துணுக்காயில் இருந்து பதினைந்து கிலோமீற்றர் தூரத்திலும் கிளிநொச்சி அக்கராயனில் இருந்து பத்து கிலோமீற்றரிலும் போக்குவரத்து குறைவாக உள்ள கிராமம் ஒன்றில் அமைந்துள்ளது கோட்டைக்கட்டியகுளம் அ.த.க பாடசாலை. தேசிய மட்டத்தில் வெள்ளிப் பதக்கம் பெறுவது என்பது நினைத்துப் பார்க்க முடியாத நிலையில் எங்களாலும் சாதிக்க முடியும் என்பதை கோட்டைக் கட்டியகுளம் பாடசாலை எறிபந்து அணியினர் வெள்ளிப் பதக்கத்தினைப் பெற்று பாடசாலைக்கும் கிராமத்திற்கும் புகழைத் தேடிக் கொடுத்துள்ளனர்.




முல்லைத்தீவு கோட்டைக்கட்டியகுளம் அ.த.க.பாடசாலை 1974ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை ஆகும். முல்லைத்தீவு மாவட்டத்தின் கிராமங்களில் ஒன்றான கோட்டைகட்டியகுளம் கிராமத்தில் அமைந்த பாடசாலை. எந்த ஓர் அடிப்படை வசதியும் அற்ற நிலையில் உள்ளது.

இந்தப் பாடசாலை சொற்ப அளவில் மாணவர்களைக் கொண்டிருந்தாலும் மிகவும் திறமை வாய்ந்த மாணவர்களை உள்ளடக்கியுள்ளது. மீள்குடியேற்றத்தின் பின் எந்த விதமான பௌதீக வள அபிவிருத்தியும் நடைபெறாத பாடசாலையாக இருந்தது. மாணவர்களின் முயற்சியாலும் அப்பாடசாலையில் 2011ஆம் ஆண்டு முதலாவது உடற்கல்வி ஆசிரியர் வே.திவாகரன் நியமனம் பெற்ற பின்னர் பாடசாலையின் விளையாட்டுத்துறை படிப்படியாக வளர்ச்சிகண்டு வருகின்றது. 2013 ஆம் ஆண்டு வடக்கு மாகாணத்தில் எறிபந்தாட்டம் அறிமுகப் படுத்தப்பட்டது. இப் பாடசாலையில் எறிபந்து என்பது ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் ஓர் இலட்சிய வெறியாகவே இருந்துவந்தது.

2013,2014,2015,2016 ஆகிய ஆண்டுகளில் மாவட்டத்தில் சம்பியன் பட்டத்தை பெற்றாலும், மாகாண மட்டத்தில் சாதிப்பது என்பது பெரும் சவாலாகவே இருந்தது. சவாலையும் மாணவர்களின் உளவியலையும் வெற்றி கொள்ளக்கூடிய ஆசிரிய வளம் இருந்ததும் விடாதபயிற்சியும் தோல்விகளைக் கண்டு துவண்டு போகாத மனவலிமை கொண்ட ஆசிரியரின் அர்ப்பணிப்பு மிக்க செயற்பாட்டின் விளைவாக இவ்வருடம் நடைபெற்ற மாகாண மட்டப் போட்டியிலும் அகில இலங்கைப் பாடசாலைகள் எறிபந்தாட்டச் சங்கம் நடத்திய தேசிய ரீதியிலான போட்டியிலும் இமாலய சாதனையைப் படைத்துள்ளது .

இவ்வருடம் நடைபெற்ற மாகாண மட்டப் போட்டியில் 17வயது ஆண்கள் பிரிவில் 2ஆவது இடமும், தேசியமட்ட எறிபந்தாட்டச் சங்கம் நடத்திய போட்டியில் 20வயது ஆண்கள் பிரிவில் 2ஆம் இடமும் பெற்றுத் துணுக்காய் கல்வி வலயத்திற்கும் மாவட்டத்திற்கும் மாகாணத்திற்கும் பெருமை சேர்த்துப் பாடசாலைக்கான தனி அடையாளத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள் இந்த மாணவர்கள்.

ஒரு பாடசாலைக்குரிய அடிப்படை வசதிகள் இல்லை. சிறந்த மைதானம் இல்லை. பாடசாலைக்கான போக்குவரத்துகள் இல்லை. மாணவர்கள் பாடசாலைக்கு நடந்து வந்து பயிற்சிகளில் ஈடுபடுகின்ற நிலைமை காணப்படுகின்றது. இவ்வாறு எல்லாத் தடைகளையும் மீறிப் பாடசாலைக்கும் கிராமத்திற்கும் துணுக்காய் கல்வி வலயத்திற்கும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்த துணுக்காய் கோட்டைக்கட்டியகுளம் எறிபந்தாட்ட அணியினரையும் பயிற்றுவித்த உடற்கல்வி ஆசிரியரையும் ஏனைய அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்களும் பாராட்டுதலுக்குரியவர்கள். எல்லாவற்றையும் மீறித் தமக்கிருந்த சகல தடைகளையும் மீறி வளமற்ற ஒரு கிராமப் பாடசாலை தேசிய மட்டத்தில் சாதித்திருக்கின்றது என்பது பாராட்டுதலுக்கும் பெருமைக்கும் உரியதே.

(ப-81)

# டோனியின் நட்பை பிரிக்க முடியாது - கோஹ்லி



டோனியுடனான எனது நட்புறவை யாராலும் பிரிக்க முடியாது என இந்தியக் கிரிக்கெட் அணித் தலைவர் விராட் கோஹ்லி தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் அணித் தலைவர் விராட் கோஹ்லி, முன்னாள் அணித் தலைவர் டோனியுடனான நட்புறவு தொடர்பான ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது, ‘எனக்கும், டோனிக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்படுத்த நிறைய பேர் முயற்சிக்கின்றனர்.

‘‘அது தொடர்பான செய்திகளை நானும் டோனியும் படிக்கின்றமை கிடையாது. எங்கள் இருவரையும் ஒன்றாகப் பார்ப்பவர்கள், எப்படி ஒற்றுமையாக இருக்கிறார்கள் என்று ஆச்சரியப்படுகின்றார்கள்.

‘‘அவ்வாறான சமயத்தில், ‘அப்படி எங்களுக்குள் என்ன இருக்கிறது என்பது தெரியவில்லை’ என்று சொல்லிச் சிரித்துக் கொள்வோம். டோனியுடனான எனது நட்புறவை யாராலும் பிரிக்க முடியாது’’ என்றும் தெரிவித்துள்ளார்.

# டோனி ஓய்வுபெற வேண்டும்


நியூஸிலாந்திற்கு எதிரான இரண்டாவது ரி-20 போட்டியில் இந்தியாவின் தோல்வியை அடுத்து டோனி இளைஞர்களுக்கு ரி-20 வாய்ப்பை விட்டுக் கொடுக்க வேண்டும் என வி.வி.எஸ் லட்சுமண் கூறினார்.

நியூஸிலாந்திற்கு எதிரான ரி-20 போட்டியின் இரண்டாவது ஆட்டத்தில் இந்தியா தோல்வியடைந்தது. அதற்கு டோனியின் சராசரியான ஆட்டமே காரணம் என முன்னாள் கிரிக்கெட் வீரர் வி.வி.எஸ் லட்சுமண் கருத்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக லட்சுமண் கூறுகையில், டோனி சர்வதேசப் போட்டிகளில் சிறப்பாக விளையாடுகின்றார். அதில் அவரின் பங்கு மிகவும் முக்கியமானது. ஆனால், ரி-20 போட்டிகளில் அவரின் ஆட்டம் சிறப்பானதாக இல்லை. எனவே, டோனி இளைஞர்களுக்கு வாய்ப்பை விட்டுக் கொடுக்கலாம். இளம் வீரர்களுக்கு வாய்ப்புக் கிடைத்தால் இந்திய அணி சிறப்பாக இருக்கும்’ என்று அவர் தெரிவித்துள்ளார்.

**வி.வி.எஸ்.லட்சுமண்**





# பரீஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ்: பட்டம் வென்றார் - ஜாக் சோக்

பிரான்ஸில் நடைபெற்று வந்த பரீஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் இறுதி போட்டியில், அமெரிக்க வீரர் ஜாக் சோக் (JACK SOCK) சம்பியன் பட்டம் பெற்றார்.

பரீஸ் மாஸ்டர்ஸ் சர்வதேச டென்னிஸ் போட்டி பிரான்ஸில் நடந்தது. இதில் நேற்றுமுன்தினம் நடந்த ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் அமெரிக்க வீரர் ஜாக் சோக் 5:7, 6:4, 6:1 என்ற செட் கணக்கில் பிலிப் கிராஜினோவிச்சை (செர்பியா) வீழ்த்தி பட்டத்தைத் தனதாக்கினார்.

ஆயிரம் தரவரிசைப் புள்ளிகளை வழங்கும் இத்தகைய மாஸ்டர்ஸ் போட்டியில் அவர் பட்டம் வென்றிருப்பது இதுவே முதல் முறையாகும். மேலும் 1999ஆம் ஆண்டு ஆந்த்ரே அகாசிக்கு பிறகு பரீஸ் போட்டியில் வெற்றி கண்ட முதல் அமெரிக்க வீரரும் இவர் தான்.

இதன் மூலம் லண்டனில் நடக்கும் முதல் தர 8 வீரர்கள் மட்டுமே பங்கேற்கும் உலக ரூர் சம்பியன்ஷிப் போட்டிக்கும் 25 வயதான ஜாக் சோக் தகுதி பெற்றார். தரவரிசையில் 22ஆவது இடத்தில் உள்ள ஜாக் சோக், இந்த வெற்றியின் மூலம் முதல் 10 இடத்திற்குள் நுழைகின்றமை குறிப்பிடத்தக்கது.

## துயிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மாவீரர்களின் உறவுகளும் மக்களும் இணைந்து இந்தப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

விசுவமடு – தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணிகளை மேற்கொள்வதற்காக நேற்று பிற்பகல் 3.00 மணியளவில் மாவீரர்களின் உறவினர்கள் அங்கு சென்றனர். அந்தத் துயிலும் இல்லத்தில் இருந்த மாவீரர்களின் கல்லறைகளை அழித்துவிட்டு முகாமிட்டுள்ள படையினர், சிரமதானம் செய்யச் சென்ற மக்களை அங்கு அனுமதிக்காது திருப்பி அனுப்பியுள்ளனர்.

தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்திலும் இம்முறை மாவீரர்களுக்குச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தலாம் என்ற எதிர்பார்ப்புடன் அங்கு சென்ற மாவீரர்களின் உறவுகள் இதனால் பலத்த ஏமாற்றமடைந்தனர்.

நல்லாட்சி அரசும் இதற்குத் தடைவிதித்துள்ளமை தமக்குப் பெரும் ஏமாற்றமாக உள்ளதாகவும், நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதாகச் சர்வதேச சமுகத்துக்குக் கூறிவரும் அரசின் உண்மை முகம் இதனால் அம்பலமாகியுள்ளதாகவும் அவர்கள் விசனம் வெளியிட்டனர்.

இராணுவ முகாம் நுழைவாயிலில் மக்களைத் தடுத்த இராணுவத்தினர், அங்கு தமது இராணுவ முகாம் அமைந்துள்ளதாகவும் அதற்குள் எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் கூறித் திருப்பியனுப்பினர்.

பெருமளவான மாவீரர்களை விதைத்த கல்லறைகள் அங்கு இருந்தன. அதற்கு மேல்தான் நீங்கள் இராணுவ முகாம் அமைத்துத் தங்கியுள்ளீர்கள். இந்த முறையாவது மாவீரர்களின் உறவுகள் தமது பிள்ளைகளை விதைத்த இடங்களில் சுடரேற்றி நினைவுகூர அனுமதியுங்கள் என மாவீரர்களின் உறவினர்களுடன் கூடச் சென்ற வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான த.குருகுலராசா, சு.பசுபதிப்பிள்ளை ஆகியோர் இராணுவத்தினரிடம் கோரினர்.

ஆயினும் எவரையும் அனுமதிக்க முடியாது எனக் கூறிப் படையினர் மறுத்து விட்டனர்.

அதனைத் தொடர்ந்து துயிலும் இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாமுக்கு அருகிலுள்ள காணியொன்றின் பற்றைக் காடுகளை வெட்டிச் சிரமதானப் பணியில் ஈடுபட்ட மக்கள் 27 ஆம் திகதி அங்கு சுடரேற்றி அஞ்சலி செய்யவுள்ளதாகக் கூறினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனும் தேராவில் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்துள்ள பகுதிக்கு நேரடியாகச் சென்று அங்கு சிரமதானப் பணியில் ஈடுபட்ட மாவீரர்களின் உறவினர்களுடன் கலந்துரையாடினார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்திலேயே அதிகளவான மாவீரர்கள் விதைக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இறந்தவர்களை நினைவுகூர இராணுவம் அனுமதி மறுத்தமை நிலைமாறுகால நீதிச் செயற்பாட்டை மீறும் நடவடிக்கை என மக்கள் விசனம் வெளியிட்டனர்.

## குடாநாட்டில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பெற்றோல் விநியோகம் நடந்தது.

நாட்டில் பெற்றோலுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டை அடுத்து யாழ்.குடாநாட்டிலும் பெற்றோலுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. நேற்று முன்தினம் முதல் பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்க ளின் முன்னால் பெற்றோல் முடிவடைந்துவிட்டது என்ற அறிவிப்புப் பலகையே தொங்க விடப்பட்டிருந்தது.

இதனால் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களைப் பயன்படுத்தும் அரச ஊழியர்கள் உட்படபலரும் நேற்றுக்காலையில் பணித்தளங்களுக்குச் செல்வதில் சிரமங்களை எதிர்கொண்டனர். சிலர் பஸ்கள் மூலமே பணிக்குச் சென்றனர்.

ஆயினும் நேற்று மதியத்துக்குப் பின்னர் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் கணிசமான அளவு பெற்றோல் விநியோகிக்கப்பட்டது. இதனால் பெற்றோலுக்கு இருந்த தட்டுப்பாடு ஓரளவு நீங்கியது.

நேற்று மாலை எரிபொருள் நிரப்பு நிலையங்களின் முன்னால் பெற்றோல் நிரப்புவதற்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்ததைக் காணமுடிந்தது.

யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல வடக்கின் பல இடங்களிலும் இதே நிலைமை காணப்பட்டதாகப் பிரதேசச் செய்தியாளர்கள் கூறினர். (உ – 100)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாக பொலிஸார் மேலும் கூறியவை வருமாறு:–

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்குப் பேருந்தில் வந்த இளைஞர் ஒருவரின் நடவடிக்கையில் சந்தேகம் ஏற்பட்டு அங்கு கடமையில் நின்ற பொலிஸார் சோதனை மேற்கொண்டனர். இதன்போது குறித்த நபரின் கைப்பையில் கேரளக் கஞ்சா இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

குறித்த நபரிடம் இருந்து 4 கிலோ 350 கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது. யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 55 வயதுடைய குடும்பஸ்தரே கைது செய்யப்பட்டவராவார்.

அவரை நீதிமன்றில் முற்படுத்தப்பட நடவடிக்கை எடுத்துள்ளதாக வவுனியாப் பொலிஸார் மேலும் கூறினர். (உ – 100)

## மன்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் அவர் எதிர்வரும் 9 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகத் தயார் என தனது சட்டத்தரணி ஊடாக உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்திருக்கின்றார்.

தன்னைக் கைது செய்யாதிருக்க நிதி மோசடி தொடர்பான பொலிஸ் பிரிவுக்கு உத்தரவிடுமாறு கோரி அவர் சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

தன்னைத் தொடர்புபடுத்தி முன்னெடுக்கப்படும் எந்தவொரு விசாரணைக்கும் முகம் கொடுக்கத்தாம் தயாராகவுள்ளார் எனவும் அவர் தனது சட்டத்தரணி ஊடாக நீதிமன்றத்திற்குத் தெரியப்படுத்தியுள்ளார். (உ)

## பெற்றோல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விநியோகம் இடம்பெறும் என்று பெற்றோலிய வளத்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

எரிபொருள் கப்பல் 8 ஆம் திகதியளவில் இலங்கையை வந்தடையும் என்றும் அதன் பின்னரே விநியோக நடவடிக்கைகள் வழமைபோல் இடம்பெறும் என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

தற்பொழுது பொதுமக்கள் மத்தியில் எரிபொருள் தொடர்பான குழப்பநிலையைச் சிலர் தோற்றுவித்ததாலேயே பெற்றோல் போன்ற எரிபொருளுக்கு நெருக்கடி நிலை ஏற்பட்டது.

எரிபொருளுக்கான போலியான நெருக்கடி நிலையை ஏற்படுத்தி சிலர் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டமை கண்டறியப்பட்டமையால் கலன்களுக்கும் போத்தல்களுக்கும் எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் வழங்கக்கூடாது என்று தடைவிதிக்கப்பட்டது.

நாளாந்த தேவையான 2500 மெற்றிக்தொன் எரிபொருளை விநியோகிப்பதற்குப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் எரிபொருள் கையிருப்பில் உண்டு.

மக்கள் எரிபொருள் தொடர்பில் பீதி கொள்ளத் தேவையில்லை. எம்மிடம் தற்பொழுது 10 ஆயிரம் மெற்றிக்தொன் எரிபொருள் உண்டு. கடந்த 18ஆம் திகதி இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட எரிபொருள் உரிய தரத்தைக் கொண்டிருக்கவில்லை. அதனால் நாம் அதனை நிராகரித்தோம். 31ஆம் திகதிக்கு முன்னர் இதற்கு மாற்றான எரிபொருளை இலங்கைக்கு அனுப்பி வைப்பதாக அந்த நிறுவனம் தெரிவித்திருந்தது. இதனைச் சுத்திகரித்து எடுத்துக் கொள்வதற்கும் சிலர் ஆலோசனை தெரிவித்தனர்.

ஆனால் நடைமுறை விதிமுறைகளுக்கு அப்பால் நாம் இவ்வாறானவற்றைச் செய்ய விரும்பவில்லை. இதனை பயன்படுத்தியே சில விசமிகள் நாட்டு மக்கள் மத்தியில் எரிபொருள் தொடர்பில் குழப்ப நிலையை தோற்றுவித்தனர்.

இதன் பின்னணியில் செயற்பட்டவர்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படும். அதற்கு முன்பாக தற்போது எரிபொருள் விநியோகத்தில் உள்ள குழப்ப நிலையை நீக்கி விநியோகத்தை வழமை நிலைமைக்கு கொண்டு வருவதே எனது முக்கிய நோக்கமாகும் – என்றார்.

## பலத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காப்புக்கு மத்தியில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோஸப் பரராஜசிங்கத்தின் படுகொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள குறித்த ஆறு பேருக்கு எதிராக அண்மையில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை திருகோணமலை மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம்.என். அப்துல்லா முன்னிலையில், மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் முற்பகல் 10.30 மணிக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கு தொடர்ந்து இன்றும் மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெற்றோலிய, மின்சாரத் துறையில் தொடர்ந்தும் மாபியாக்களாம்!

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவிக்கிறார்

பெற்றோலியம் மற்றும் மின்சக்தி ஆகிய துறைகளில் தொடர்ந்தும் பல்வேறு தரப்பட்ட மாபியாக்கள் செயற்பட்டு வருகின்றன என மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

எண்ணெய்சுத்திகரிப்பு தடைப்படுவது, எண்ணெய்க் கப்பல் தாமதமாவது, நாட்டில் எண்ணெய் பற்றாக்குறை ஏற்படுவது என்பன எதேச்சையாக நடைபெறும் விடயங்களா என்பதைக் கண்டறிய வேண்டும் எனவும் அவர் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கூறியுள்ளார்.

பெற்றோலிய துறையிலும், மின்சக்தி துறையிலும் எப்போதுமே பற்றாக்குறையொன்றை ஏற்படுத்தி கூடிய விலையில் கொள்வனவு இடம்பெற்று வருகின்றது. இந்த உண்மையை மக்கள் அறிந்து கொள்ளவேண்டும். நான் அமைச்சராக இருந்த காலத்திலும் எண்ணெய் நெருக்கடியொன்றை ஏற்படுத்த சில சதிகள் இடம்பெற்றன. அதனை நான் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தேன். அதனை எப்படி கட்டுப்படுத்தினேன் என்பதை பகிரங்கமாக கூற நான் விரும்பவில்லை.

அதன்பின்னர், எனது காலத்தில் யாரும் இந்த எண்ணெய் பிரச்சினையை ஏற்படுத்த முயற்சிக்க முன்வரவில்லை. நல்லாட்சி என்பது சிறந்தது. இருப்பினும், நிர்வாகம் என்பதும் இடம்பெற வேண்டும். – எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# சவுதியில் கொள்ளை தொடர்பாக எட்டு இலங்கையர்களுக்கு சிறை!

சவுதி அரேபியாவில் 5 கோடி ரூபா கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் 8 இலங்கையர்களுக்குச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இந்த சிறைத்தண்டனையை சவுதி அரேபிய நீதிமன்றம் விதித்துள்ளது.

சவுதி அரேபியாவில் பாதுகாப்பு சேவையில் கடமையாற்றிய 6 இலங்கையர்களுக்கும் சுத்தப்படுத்தல் நடவடிக்கையில் ஈடுபட்ட இரண்டு இலங்கையர்களுக்குமே இந்தச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

வான் ரக வாகனம் ஒன்றில் பணம் கொண்டு சென்ற போதே அவர்கள் கொள்ளை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என அந்த நாட்டு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

சந்தேகத்துக்குரிய 6 பாதுகாப்பு அதிகாரிகளுக்கு 3 வருட சிறை தண்டனையும் சுத்தப்படுத்தல் நடவடிக்கையில் ஈடுபட்ட இரண்டு பேருக்கு ஒரு வருட காலச் சிறை தண்டனையும் வழங்கப்பட்டுள்ளன.

அவர்களது தண்டனைகாலம் நிறைவடைந்தவுடன் அவர்கள் இலங்கைக்கு நாடு கடத்தப்படவுள்ளனர் எனவும் சவுதி அரேபிய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## ஆயுதமின்றியே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

தற்போதைய ஆட்சியாளர்களின் இயலாமையை நோக்கும்போது, பிரபாகரன் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் எனத் தோன்றுகிறது. அந்த அளவுக்கு நாட்டில் பிரச்சினைகள் தலை தூக்கியுள்ளன.

பிரபாகரன் இருந்திருந்தால், ஆயுதம் ஏந்தாமல் தற்போதைய ஆட்சியாளர்களை அடக்கியிருப்பார். அந்த அளவுக்குப் பலவீனமான நிலையில் இந்த அரசு உள்ளது.

அதிகாரப் பகிர்வின் மூலம் நாட்டிலுள்ள பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என அரசு கூறுகிறது. ஆனால், பெற்றோல் பிரச்சினையைச் சமாளிக்க முடியாமல் திண்டாடுகின்றது. பெற்றோல் பிரச்சினையைத் தீர்க்காமல், எரிபொருளைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு பெற்றோலியவளத்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க கூறுகிறார்.

அவர் கூறுவதைப் போல சிக்கனமாகச் செயற்படுவதற்கு, உங்களது வாகனங்களைத் தள்ளிக்கொண்டு செல்லுங்கள். உங்களால் தள்ள முடியாவிட்டால், அமைச்சர் அர்ஜுனவை அழைத்துவந்து தள்ளுமாறு கூறுங்கள் – என்றார்.

## இரணைமடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர் அங்கிருந்து வெளியேறியுள்ளனர் எனப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

இரணைமடுக்குளத்தின் நீர்ப்பாசனத்திணைக்களத்துக்குச் சொந்தமான விடுதிகளை இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்து பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

இறுதிப் போரின் பின்னர் அந்தப் பகுதி இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வந்தது.

இரணைமடுக் குளத் தைப் பார்வையிட வரும் மக்களுக்குச் சிற்றுண்டிச்சாலை ஒன்றை அமைத்து இராணுவத்தினர் வியாபாரமும் செய்து வந்தனர்.

இரணைமடுக் குளத்தின் அபிவிருத்திப் பணிகள் நிறைவடையும் நிலையில் குறித்த பகுதியைவிட்டு இராணுவத்தினர் வெளியேறியுள்ளனர்.

இரணைமடுக் குளத்தைப் பார்வையிட இனி சுதந்திரமாகச் செல்ல முடியும் எனப் பிரதேச மக்கள் கூறினர்.

# உயிர்ப் பாதுகாப்புள்ள நாடுகள் வரிசையில் உள்ளது இலங்கையும்!

கொழும்பு, நவ. 07

உலகில் 140 நாடுகளில் சுகாதாரசேவை உயிர்ப் பாதுகாப்புள்ள சிறந்த 34 நாடுகளில் இலங்கையும் இடம்பெற்றுள்ளது.

உலகளாவிய பொருளாதார அமைப்பின் புதிய அறிக்கையில் இது தொடர்பில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் பெண்கள் /ஆண்கள் சமூக நிலை தொடர்பாக மேற்கொள்ளப் பட்ட ஆய்வில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

The Global Gender Gap Report 2017 என்ற அறிக்கையிலேயே இந்த விடயம் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.




இலங்கை வைத்திய நிர்வாகத்தினரின் சங்கத்தின் அறிவியல் கூட்டத்தொடர் கொழும்பு கிங்ஸ் பெறி ஹோட் டலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரத்ன இது தொடர்பில் விவரித்தார்.

இங்கு கருத்து தெரிவித்த சுகாதார அமைச்சர்-

இந்த உன்னதமான வெற்றியை பெற்றுக்கொள்வதற்கு ஜனாதிபதியின் தலைமைத்துவமே காரணமாகும். இதனை பாராட்டுவதாக தெரிவித்த அவர். இந்த வெற்றியைப் பெற்றுக்கொள்வதற்காக வைத்திய நிர்வாகத்தினர் பெரும் பங்களிப்பு வழங்கினர்.

வைத்தியத்துறை நிர்வாகத்தினர் விடுமுறை தினத்தை கவனத்தில் கொள்ளாது சேவையை வழங்கியமையே இந்த வெற்றிக்கு காரணம் என்றும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

## பண்டாரநாயக்க ஞாபகார்த்த அமைப்பின் ஸ்தாபகர்களை நினைவுகூரும் நிகழ்வு



கொழும்பு, நவ. 07

எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க தேசிய ஞாபகார்த்த மன்றத்தால் அதன் ஸ்தாபகர்களை நினைவு கூருவதற்காக இரத்த மற்றும் கண்தான நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இதன்போது மத வழிபாட்டு நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இரத்த மற்றும் கண்தான முகாம்கள் அவர்களுக்கு கௌரவமாக அமைய வேண்டும்.

பண்டாரநாயக்க தேசிய ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் இது தொடர்பான நிகழ்வு இடம்பெற்றுள்ளது. (ப)

### தீவிரமான போர் முனைகள் சூழ்ந்திருந்த வேளையில்

# சவால்களுக்கு மத்தியில் உணவுத் தடையை சமாளித்த பெருந்தகை இராசநாயகம் ஐயா!

திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்களின் சிவபதபேறு குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் விடுத்துள்ள அனுதாபச் செய்தி.



சாணக்கிய தலைமைத்துவத்தின் அடையாளமாய் இராசநாயகம் ஐயா திகழ்கின்றார் .

பூர்வீக வரலாற்று மண்ணாகிய பூநகரியில் பிறந்து கிளிநொச்சி மண்ணின் பல்துறை ஆளுமையின் அடையாளமாக திகழ்ந்த திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்கள் சிவபதபேறு பெற்றமை அறிந்து ஆழ்ந்த துயருற்றோம்.

ஐயாவின் வாழ்வு முழுமையும் கிளிநொச்சி மாவட்ட வளர்ச்சியோடும் வரலாற்றோடும் பிணைந்து இருந்தது. வயற்புலப்பண்பாட்டின் அடித்தளத்திலிருந்து கட்டமைக்கப் பட்ட கிளிநொச்சியின் பல்துறைசார் வளர்ச்சியில் இராசநாயகம் ஐயாவின் பங்கும் பணியும் அளப்பரியது.

'அர்ப்பணித்தல்' என்னும் உயரிய தத்துவத்தை தனது வாழ்வியல் முழுவதும் வெளிப்படுத்தி வாழ்ந்த உத்தமர் அவர். அவரது வளர்ச்சிப் பாதையின் ஒவ்வொரு தடங்களிலும் அவர் எதிர்கொண்ட சவால்களை சாதனைகளாக்கிய செயல்வீரனாக திகழ்ந்தார். தன்னைச் சூழ்ந்திருந்த வறுமை எனும் நச்சுவட்டத்தை அறிவு, உழைப்பு என்னும் தேடல்களால் உடைத்து உயர்ந்த உன்னதமானவர்.

திட்டமிடல் சேவையின் முன்னோடியாக விளங்கிய அவர் கிளிநொச்சி நகரைத் திட்டமிட்டு வடிவமைக்க வேண்டும் என கண்ட கனவுகளும் அதற்காக உழைத்த திடமும் வரலாற்றின் பதிவாகும்.

அறிவியல்நகர் உருவாக்கம் அவர் ஆற்றிய அத்தகையபணிக்கு சாட்சியமாகத் திகழ்கிறது. கிளிநொச்சி கூட்டுறவு மண்டபம் மற்றும் இராணுவத்தால் இடித்தழிக்கப்பட்ட கிளிநொச்சி பண்பாட்டு மண்டபம் என்பவை இராசநாயகம் அவர்களின் சிந்தனையில் உருப்பெற்றவை.

தீவிரமான போர்முனைகள் சூழ்ந்திருந்த அக்காலத்தில் உணவுத் தடையை அரசு விதித்திருந்தது. பல்வேறு சவால்கள், அழுத்தங்கள், தன் முன்னே இருந்த போதும் இரண்டு தடவைகள் அரசாங்க அதிபராக பொறுப்பேற்கத் துணிந்தமை அவரது அபாரமான தன்னம்பிக்கையின் வெளிப்பாடாகும். குறிப்பாக, புலிகளுக்கு உணவைக் கொண்டு போய்கொடுக்கிறாயா? என பாதுகாப்பு உயர்பீடம் அச்சுறுத்தியபோது தாய்க்கு கொடுக்கும் நிவாரணத்தில் அந்த தாய் தனது புலிப்பிள்ளைக்கு உணவளித்தால் நான் என்ன செய்ய முடியும் அதற்காக முழு மக்களையும் பட்டினி போட்டு கொல்ல வேண்டாம்' என வாதாடிய மக்கள் நல அதிகாரியாக எங்கள் மனங்களில் இருக்கிறார்.

யுத்தத்தினாலும் பொருளாதாரத் தடையாலும் மக்கள் பட்டினி சாவின் விளிம்பில் இருந்தபோது பாடசாலைகளில் இலைக்கஞ்சி திட்டத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம் கல்வித்துறைக்கு அவர் ஆற்றிய பணி அற்புதமானது.

பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவர்கள் தமது உயர்கல்வியைத் தொடர்வதற்கு சவால்களை எதிர்கொண்ட போது கிளிநொச்சி மாவட்ட கல்வி நிதியத்தை உருவாக்கி உதவியவர் இராசநாயகம் ஐயா.

பல முகாமைத்துவ உதவியாளர்களை பல்வேறு திணைக்களங்களிலும் அரச சேவையாளர்களாக உள்வாங்குவதற்கு அவர் ஆற்றிய காலப்பணி என்றும் நன்றியுடன் நினைவுகூரத்தக்கதாகும்.

பூநகரி மண்மீது கொண்டிருந்த தீராக்காதல் அவரது மகத்துவமான மண்பற்றின் வெளிப்பாடாக இருந்தது. திறந்த மனத்தினனாக கலந்துரையாடுவதும், இன்மொழி பேசி இதயங்களைக்கவர்வதும் இவரது ஆளுமைக்கு வலுச்சேர்த்தவை என்பேன்.

மாவட்டக்கல்வி நிதியம், தொழில்நுட்பக்கல்வி நிறுவனம், யோகர் சுவாமிகள் முதியோர் இல்லம், காந்தி சேவா சங்கம் என்பவை இவரது கல்வி அறப்பணிகளின் நிலைக்களங்களாக இன்று கிளிநொச்சியில் மிளர்கின்றன.

சைவத்தின் மீதும் தமிழின் மீதும் அறவற்ற பற்றுடைய இராசநாயகம் ஐயா உருத்திரபுரீச்சர சிவாலயத்தின் தலைவராக இருந்தபோது வரலாற்றின் அபகரிப்பு ஒன்றிலிருந்து அந்த ஆலயத்தையும் அம்மண்ணையும் பாதுகாத்தவர் என்பது பதிவு செய்யப்படவேண்டியது.

எல்லாவற்றுக்கும் மேலாக 2009 ஆம் ஆண்டு பிற்பாடு பேரவலமும் பெருவலியும் சுமந்து நிராதரவாய் நின்ற எம் தேசக்குழந்தைகளை மகாதேவ சைவச்சிறுவர் இல்லத்தில் அரவணைத்து ஆயிரம் ஆயிரம் பிள்ளைகளின் வாழ்வில் ஒளியூட்டிய தந்தையாக ஐயா இருந்தார். தந்திரோபாய முகாமைத்துவத்தின் தலைசிறந்த அதிகாரியாக அன்பும் அறனும் தன்னிதயத்தில் சுமந்த அதியுயர்தலைவனாக விளங்கியதன் மூலம் கிளிநொச்சி மாவட்ட மக்களின் மனங்களில் நிலைபெற்ற ஒருவராக இராசநாயகம் ஐயா பரிணமிக்கின்றார்.

கல்வி, நிர்வாகம், சமூகசேவைகள், அறப்பணிகள் என எல்லாவற்றிலும் தன்னை அர்ப்பணித்த இராசநாயகம் ஐயா ஒப்பாரும் மிக்காரும் இல்லாத அரும்பெரும் மனிதனாக, எங்களுக்கெல்லாம் வழிகாட்டி தன்வாழ்நாளை நிறைவு செய்திருக்கின்றார்.

அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரின் துயரால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர், மகாதேவா சைவச்சிறுவர் இல்லக்குழந்தைகள் அவர் மீது அன்பும் அபிமானமுமுடைய அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

★

காலைக்கதிர் Kalaikkathir



# வடக்கு–கிழக்கில் தமிழ் உத்தியோகபூர்வ மொழி

## புதிய அரசமைப்பு அதனை உறுதிப்படுத்தும் திருமலைக் கூட்டத்தில் சம்பந்தன் தகவல்

திருகோணமலை, நவ.7

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியும், ஏனைய ஏழு மாகாணங்களில் சிங்கள மொழியும், உத்தியோகபூர்வமொழியாக பயன்படுத்தப்படும் விதத்தில் புதிய அரசமைப்பு உருவாகப்படவுள்ளது என எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.



திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில்கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு தெரிவித்தவை வருமாறு:

நாம் தற்போது 2017 ஆம் ஆண்டின் இறுதியிலும் 2018 பிறக்கவுள்ள காலப்பகுதியில்உள்ளோம். எதிர்வரும் நாள்களில் பல தேர்தல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் ஒற்றுமையாகவும் நிதானமாகவும் செயற்பட வேண்டும். பிரதேசசபைகளில்மக்களின் இன விகிதாசாரங்களின் அடிப்படையில்உத்தியோக பூர்வமொழிகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

அரச அலுவலகங்களில் இருந்து அனுப்பப்படுகின்ற கடிதங்கள் யாருக்கு அனுப்பப்படுகிறதோ அவர்களின்மொழியில் அமைந்திருக்கவேண்டும். அரச உத்தியோகங்களில் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். இனி இந்த நிலை திருத்தப்படவேண்டும். இவ்வாறான விடயங்கள் மக்களின் சமத்துவத்தைபாதிக்கும். எனவே அரச அதிகாரிகளும் இவ் விடயத்தில் சமத்துவத்துடன் நடந்து கொள்ளவேண்டும் – என்றார்.

## அம்பாறையில் இருந்து யாழ். வந்த பஸ் விபத்து; ஒருவர் உயிரிழப்பு



கொழும்பு – மட்டக்களப்புநெடுஞ்சாலையில்மொனராத் தென்னபகுதியில் நேற்று நள்ளிரவு இடம்பெற்ற விபத்தில் ஒருவர் பலியானார். மேலும் மூவர் படுகாயமடைந்துள்ளனர். அம்பாறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த கல்முனை சாலைக்குச் சொந்தமான இ.போ.ச. பஸ்ஸுடன், பொலான்னறுவையிலிருந்து வெலிக்கந்தை நோக்கி வந்துகொண்டிருந்த லொறி, மோதியதில் இவ் விபத்து இடம்பெற்றது.

விபத்தில் காயமடைந்தவர்கள் வெலிக்கந்தை பிரதேச வைத்தியசாலைக்கு உடனடியாக அனுப்பிவைக்கப்பட்டு, படுகாயமடைந்த மூவர் மேலதிக சிகிச்சைக்காக பொலன்னறுவை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். விபத்தில் சிக்கிய பஸ்ஸில் இருந்த பயணிகள் தமது பயணத்தை தங்குதடையின்றித் தொடர்வதற்காக வேறு பஸ் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டதாகவும் பயணிகள் எவருக்கும் காயமேற்பட வில்லை என்றும் கல்முனை இலங்கைப் போக்குவரத்துச் சபைசாலை முகாமையாளர் வெள்ளத்தம்பி ஜவ்பர் தெரிவித்தார்.

## போலி நாணயத்தாள்களைத் தயாரித்து வைத்திருந்த இளம் தம்பதியர் கைது!

### யாழ்ப்பாணம் - மணியம்தோட்டப் பகுதியில்

யாழ்ப்பாணம், நவ.7

போலி நாணயத்தாள்களை அச்சிட்டு உடைமையில் வைத்திருந்தவர்கள் என்று கூறப்படும் இளம் தம்பதியர் நேற்று மாலை யாழ்ப்பாணம் பொலிஸாரால்கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து 21 லட்சத்துத்து 48 ஆயிரம் ரூபா பெறுமதியானபோலி நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், அரியாலை – மணியம்தோட்டம் பகுதியிலுள்ள அவர்களுடைய வீட்டில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம், கல்வியங்காடு பகுதியிலிருந்து குடும்பத் தலைவர் ஒருவர் போலி நாணயத்தாள்களை அச்சிட்டு தனது பணத்தேவைக்குப் பயன்படுத்த சில மாதங்களுக்கு முன்னர் முற்பட்டிருந்தார்.

எனினும் அதனை கடை உரிமையாளர் அறிந்துகொண்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கியிருந்தார்.

அதனடிப்படையில் குடும்பத் தலைவரைக் கைது செய்ய முற்பட்ட போதும் அவர் வீடுமாறி தலைமறைவாகியிருந்தார்.

இந்நிலையில் அவர் தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அவரது வீட்டுக்கு சென்று சோதனை நடத்தப்பட்டது.

அங்கு 5,000 ரூபா போலி நாணயத்தாள்கள் நானூறும், 1,000 ரூபா போலி நாணயத்தாள்கள் நூற்று நாற்பத்தெட்டும் கைப்பற்றப்பட்டன.

அவற்றை அச்சிடப் பயன்படுத்தப்பட்டவை என நம்பப்படும் பிறிண்டர், ஸ்கானர் மற்றும் மடிகணினி என்பனவும் மீட்கப்பட்டன.

பொலிஸார் அங்கு சென்றவேளை குடும்பத்தலைவர் வீட்டில் இல்லாததனால் அவரது மனைவி கைது செய்யப்பட்டார்.

கணவனும் சிறிது நேரத்தில்கைது செய்யப்பட்ட நிலையில்இருவரும் இன்று நீதிவான் நீதிமன்றில்முற்படுத்தப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

24 வயதுடைய இராசலிங்கம் லபீசன் அவருடைய மனைவி 19 வயதுடைய கிருசாந்தி ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டனர்' என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

## அமெ. பிரதிநிதியுடன் பிரதமர் ரணில் சந்திப்பு

இரண்டு நாள்கள் பயணமாக இலங்கை வந்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் தோமஸ் சானொன் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

நேற்று மாலை கொழும்பு வந்த, அமெரிக்காவின் உதவிச் செயலர் தோமஸ் சானொன், அலரி மாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசினார்.

இதன்போது, சுதந்திரமான, திறந்த இந்தோ – பசுபிக் பிராந்தியத்தை வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டதாக இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தின் டுவிட்டர் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பேச்சுக்களில் அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப்பும் பங்கேற்றிருந்தார்.

## வெங்காயத்தை உலர்த்திய காற்றாடியில் சிக்குண்டு பெண் ஒருவர் உயிரிழப்பு

வெங்காயம் உலர்த்துவதற்காக உழவு இயந்திரத்தில் பொருத்தியிருந்த காற்றாடியில் சிக்கி பெண் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார். புத்தூர்ப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இதில்அறிவொளி வீதி, புத்தூர் பகுதியைச் சேர்ந்த இரத்தினம் தவமலர் (வயது – 58) என்ற பெண்ணே உயிரிழந்தார்.

கடந்த சில நாள்களாக விடாது பெய்த மழையால், வீட்டில் கட்டியிருந்த வெங்காயப்பிடிகள் மழையில் நனைந்திருந்தன. அதனால் உழவு இயந்திரத்தை இயக்கி, அதில்காற்றாடியை இணைத்து, வெங்காயத்தை உலரவைத்துள்ளனர். பெண், ஆடைகளைஉலர்த்துவதற்காக காற்றாடிக்கு அருகில், ஈரமான ஆடைகளை எடுத்து சென்றுள்ளார். காற்றாடியில் இருந்து வந்த காற்று, அவரை உள் இழுத்துள்ளதுடன், அணிந்திருந்த சேலையும் சக்கரத்தில் சிக்குண்டுள்ளது.

இதனால், காற்றாடியின் பிளேட்டுக்குள்சிக்குண்டதில் பாரிய வெட்டுக் காயங்களுக்கு உள்ளாகினார். அவர் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றபோது, இடைநடுவில் உயிரிழந்துள்ளார்.



கிளிநொச்சி மாவட்டத்தின் முன்னாள் அரச அதிபரும் மகாதேவா சைவ சிறார் (குருகுலம்) இல்லத்தின் தலைவருமான அமரர் திருநாவுக்கரசு இராசநாயகத்தின் இறுதி நிகழ்வுகள் நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றன. நூற்றுக்கணக்கான குழந்தைகள் கதறி அழ, கிளிநொச்சி ஜெயந்திநகரில் அமைந்துள்ள சிறுவர் இல்லத்தில் அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அப்போது எடுக்கப்பட்ட படங்கள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.11.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்படுகிறது.